

# 1 எனது நண்பர்கள்




இவர்கள் என்ன பேசுகிறார்கள்? கற்பனை செய்வோம்; கலந்துரையாடுவோம்; பேசுவோம்; உரையாடிக் காட்டுவோம்.

## செயற்பாடு 1

**ஆசிரியரின் உதவியுடன் உரையாடலைச் செவிமடுப்போம்; வாசிப்போம்.**

■ ஜனனி  ● சிவா  ▲ கீதா

▲ வணக்கம் சிவா.

● வணக்கம். வணக்கம். எப்படிச் சுகம்?

▲ நல்ல சுகம்.

● கீதா........
உங்கள் சுகம் எப்படி?

▲ நானும் நல்ல சுகம்.

● இவர் யார்?

▲ இவர் என் புதிய நண்பி ஜனனி.

▲ ஜனனி, இவர் என் நண்பன் சிவா.

● வணக்கம் ஜனனி.

■ வணக்கம் சிவா.

● உங்கள் பழைய பாடசாலையின் பெயர் என்ன?

■ ஸ்ரீ சரஸ்வதி வித்தியாலயம்.

● உங்கள் ஊர் எது ?

■ எனது ஊர் ஹற்றன். உங்கள் ஊர் எது ?

● எனது ஊர் தெஹிவளை.

■ உங்களைச் சந்தித்தது சந்தோஷம்.

● எனக்கும் சந்தோஷம்.

▲ வாருங்கள் வகுப்புக்குப் போவோம்.

●■ சரி, போவோம்.

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| 1. **புதிய நண்பி** | - | අලුත් මිතුරිය |
| 2. **பழைய பாடசாலை** | - | පරණ පාසල |
| 3. **சந்தித்தது** | - | හමුවීම |
| 4. **சந்தோஷம்** | - | සතුටුයි |
| 5. **போவோம்** | - | යමු |
| 6. **இவருடைய** | - | මෙයාගේ |
| 7. **இவரின்** | - | මෙයාගේ |
| 8. **இவருக்கு** | - | මෙයාට |

## செயற்பாடு 2

**உரையாடலைச் செவிமடுப்போம்; சரி (✓) பிழை (×) இடுவோம்.**


1. புதிய நண்பியின் பெயர் ஜனனி. ☐
2. ஜனனியின் பழைய பாடசாலை ஸ்ரீ விக்கிரமசிங்க வித்தியாலயம். ☐
3. சிவாவின் ஊர் ஹற்றன். ☐


## செயற்பாடு 3


பாத்திரமேற்று வாசிப்போம்.


## செயற்பாடு 4







**பின்வரும் எழுத்துக்களை அவதானிப்போம்.**









## செயற்பாடு 5

உரையாடலில் உள்ள புதிய எழுத்துக்களை இனங்காண்போம். பயன்படுத்துவோம்.

## செயற்பாடு 6

2

**ஆசிரியரின் உதவியுடன் செவிமடுப்போம்; வாசிப்போம்.**



இவர் சரஸ்வதி.



இது ஜம்பு.



இவர் ஹனுமான்.



இவர் ஸ்ரீ விக்கிரமராஜசிங்க.




இது ஹிமாலயம்.



இவர் லக்ஷ்மி.

## செயற்பாடு 7

**படங்களுக்குப் பொருத்தமான சொல்லை வாசிப்போம்; இணைப்போம்.**



ஜன்னல்



லக்ஷ்மி




புஷ்பம்




ஹிமாலயம்



ஜம்பு



சரஸ்வதி



ஸ்ரீ லங்கா

## செயற்பாடு 8

**பின்வரும் இடைவெளிகளை நிரப்புவோம்.**

1. இது அழகான பு ____ பம்.



2. இலங்கையின் தலை நகரம். ______ யவர்த்தனபுரம்.



3. இது சின்ன ____ ன்னல்.



4. இந்த ஐ ____ பழம் சுவையானது.





## செயற்பாடு 9

3

**ஆசிரியரின் உதவியுடன் இடப் பெயர்களைச் செவிமடுப்போம்; வாசிப்போம்.**

- ஹப்புத்தளை
- ஜாவத்தை
- ஹற்றன்
- ஹோமாகம
- ஹம்பாந்தோட்டை
- ஜாஎல
- தெஹிவளை
- கம்பஹா
- கட்டுகஸ்தோட்டை
- மஹரகம



## செயற்பாடு 10

**வகுப்பு நண்பர்களின் பெயர்களையும் ஊர்களையும் கேட்டு அறிவோம்; அவற்றில் ஸ,ஷ,ஹ,ஜ,ஸ்ரீ எழுத்துக்கள் வரும் பெயர்களை அட்டவணைப்படுத்துவோம்.**

| நண்பர்களின் பெயர்கள் | நண்பர்களின் ஊர்ப் பெயர்கள் |
| --- | --- |
| | |



## செயற்பாடு 11

**படத்தை அவதானிப்போம்; பந்தியை வாசிப்போம்.**



இவர் என் புதிய நண்பி. இவரின் பெயர் ஜனனி. இவரின் ஊர் ஹற்றன். இவருடைய பழைய பாடசாலை ஸ்ரீ சரஸ்வதி வித்தியாலயம். இவருக்குப் பன்னிரண்டு வயது. இவரின் பொழுதுபோக்கு ஹொக்கி விளையாடுதல். இவருக்கு ஐஸ்பழம் சாப்பிட விருப்பம்.

## செயற்பாடு 12

**பந்தியை வாசிப்போம்; இடைவெளிகளை நிரப்புவோம்.**

1. ____________ ஜனனி.
2. ____________ ஊர் ஹற்றன்.
3. ____________ பழைய பாடசாலை ஸ்ரீ சரஸ்வதி வித்தியாலயம்.
4. ____________ பன்னிரண்டு வயது.
5. ____________ பொழுதுபோக்கு ஹொக்கி விளையாடுதல்.
6. ____________ ஐஸ்பழம் சாப்பிட விருப்பம்.

## செயற்பாடு 13

**உதாரணத்தை அவதானிப்போம்; வாசிப்போம்;**
**ஜனனியைப் பற்றியும், சிவாவைப் பற்றியும் எழுதுவோம்.**



பெயர் : கீதா
ஊர் : யாழ்ப்பாணம்
வயது : 12

இவர் என் நண்பி.
இவருடைய பெயர் கீதா.
இவரின் பெயர் கீதா.
இவருடைய ஊர் யாழ்ப்பாணம்.
இவருக்கு 12 வயது.



பெயர் : சிவா
ஊர் : தெஹிவளை
வயது : 12

______________________________
______________________________
______________________________
______________________________
______________________________



பெயர் : ஜனனி
ஊர் : ஹற்றன்
வயது : 12

______________________________
______________________________
______________________________
______________________________
______________________________

## செயற்பாடு 14

நண்பருடன் இணைவோம்; நண்பனை / நண்பியைப் பற்றிச் சொல்லுவோம்; எழுதுவோம்.

## செயற்பாடு 15

**பெற்றோரை அறிமுகம் செய்வோம்.**

| | அம்மா | அப்பா |
|---|---|---|
| 1. பெயர் | | |
| 2. ஊர் | | |
| 3. வயது | | |
| 4. பொழுது போக்கு | | |
| 5.விருப்பமான உணவு | | |


## செயற்பாடு 16

விருப்பமான உறவினரை வரைவோம்; அவரைப் பற்றி 5 வசனங்கள் எழுதுவோம்.

1. ...........................................................................................
2. ...........................................................................................
3. ...........................................................................................
4. ...........................................................................................
5. ...........................................................................................



# செவிமடுப்போம் உச்சரிப்போம்



க → ක, ග, හ

4

| க - ක | க - ග | க - හ |
| --- | --- | --- |
| கண் | உங்கள் | சுகம் |
| காது | இலங்கை | அழகான |
| அக்கா | சிங்கம் | தாகம் |
| குடை | எங்கே ? | மகன் |
| தக்காளி | அங்கே | புத்தகம் |
| வணக்கம் | தங்கை | முகம் |
| எனக்கு | | |




## දැන් මට පුළුවන්

| | ✓ ලකුණු කරන්න | | |
| --- | --- | --- | --- |
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍ය |
| 1. ස,ෂ,හ,ජ,ශ්‍රී උච්චාරණය කිරීම | | | |
| 2. ස,ෂ,හ,ජ,ශ්‍රී අක්ෂර ලිවීම | | | |
| 3. இவருடைய, இவரின், இவருக்கு වැනි පද අවස්ථාවට අනුව භාවිත කිරීම | | | |
| 4. මිතුරෙකු ගැන හඳුන්වා දීම | | | |
| 5. නැදැයින් ගැන හඳුන්වා දීම | | | |
| 6. க අක්ෂරයේ ක,ග,හ යන උච්චාරණ වෙනස්කම හඳුනා ගැනීම | | | |

## 2

# வனம்

**படம் பார்த்துக் கலந்துரையாடுவோம்.**



**ஆசிரியரின் உதவியுடன் பாடலைச் செவிமடுப்போம்;**



பூ பூத்து இருக்குது
பழம் பழுத்துத் தொங்குது
பூக்களிலே தேனீக்கள்
தேன் எடுக்குது.
பழம் பறித்து
குரங்கு கூட்டம்
ருசித்து உண்ணுது.

பட்டம் போல
பறவைக் கூட்டம்
பறந்து செல்லுது.
வனம் முழுதும் வானரங்கள்
பாய்ந்து திரியுது.
பூவும் பழமும் சேர்ந்த்து நல்ல
வாசம் வீசுது.

வட்ட நிலா மெல்ல மெல்ல
எட்டிப்பார்க்குது.
நட்சத்திரங்கள் கண்ணைக் கண்ணை
சிமிட்டிக் காட்டுது.
காட்டு யானையும்
சிங்கம் புலியும் உலவுகின்றன
அதோ உலவுகின்றன.

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| பூத்து இருக்குது | - | පිපී තිබෙනවා |
| பழுத்து | - | ඉදී |
| தொங்குது | - | එල්ලෙයි |
| தேனீக்கள் | - | මී මැස්සෝ |
| தேன் | - | මී පැණි |
| எடுக்குது | - | ගනී |
| பழம் பறித்த | - | පලතුරු කැඩූ |
| குரங்குக் கூட்டம் | - | වඳුරු රංචුව |
| ருசித்து | - | රසකර |
| உண்ணுது | - | කයි |
| பறவைக் கூட்டம் | - | කුරුලු රෑන |
| போல | - | වගේ |
| வானரங்கள் | - | වඳුරෝ |
| திரியுது | - | එහෙ මෙහෙ ඇවිදියි |
| வாசம் | - | සුවඳ |
| வீசுது | - | හමයි |
| நட்சத்திரங்கள் | - | තරු |
| சிமிட்டு | - | ඇසිපිය ගසයි |
| உலவுகின்றன | - | එහෙ මෙහෙ ඇවිදියි |




## செயற்பாடு 1

**சோடிகளாக இணைவோம்; படம் பார்ப்போம்; கலந்துரையாடுவோம்; வாசிப்போம்; பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புவோம்.**


பூ, பழங்கள், குரங்குகள், தேனீ, ,இலை, வனம், இலைகள் நட்சத்திரம், புறாக்கள், பழம், மரம்,



______________ ______________ ______________ ______________






______________ ______________ ______________ ______________



______________________



______________________



______________________




**இடைவெளிகளை நிரப்புவோம்.**

| ஒருமை | பன்மை |
|---|---|
| | பூக்கள் |
| பழம் | |
| குரங்கு | |
| | தேனீக்கள் |
| இலை | |
| | நட்சத்திரங்கள் |
| புறா | |
| | மரங்கள் |



## செயற்பாடு 3

**படங்களைப் பொருத்தமான சொற்களோடு இணைப்போம்.**



கிளிகள்



யானைகள்




குரங்குகள்



மான்கள்



பறவைகள்



கரடி

## செயற்பாடு 4

**(அ) மேலே உள்ள சொற்களைக் கொண்டு அட்டவணையை நிரப்புவோம்.**

| -கள் | | -க்கள் | | -ங்கள் | |
|---|---|---|---|---|---|
| **ஒருமை** | **பன்மை** | **ஒருமை** | **பன்மை** | **ஒருமை** | **பன்மை** |
| குரங்கு | குரங்குகள் | பூ | பூக்கள் | நட்சத்திரம் | நட்சத்திரங்கள் |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

**(ஆ)** ஒருமைச் சொற்களைப் பன்மைச் சொற்களாக மாற்றி எழுதும்போது ஏற்படும் மாற்றங்களை இனங்காணுவோம்; அவற்றில் கீழ் கோடிடுவோம்.

## செயற்பாடு 5

- சோடிகளாக இணைவோம்.
- A,B பத்திரங்களில் உள்ள ஒருமை, பன்மைச் சொற்களைப் பற்றி நண்பருடன் கலந்துரையாடுவோம்.
- 10 நிமிடத்தில் இடைவெளிகளை நிரப்புவோம், கூறுவோம்.
- முதலில் நிரப்பும் சோடி வெற்றியாளராவீர்.

**(A)**

| ஒருமை | பன்மை |
|---|---|
| மேசை | |
| | தலைகள் |
| குடம் | |
| | புத்தகங்கள் |
| அம்மா | |
| | ஈக்கள் |
| பாடம் | |
| | அப்பாமார் |
| | குடைகள் |
| கை | |

**(B)**

| | |
|---|---|
| [illegible] | |
| | [illegible] |
| | [illegible] |
| [illegible] | |
| | [illegible] |
| [illegible] | |
| | [illegible] |
| [illegible] | |
| | [illegible] |
| [illegible] | |
| **[illegible]** | **[illegible]** |



## செயற்பாடு 6

**ஆசிரியரின் உதவியுடன் ஓய்வு நேரத்தில் குழுக்களாகப் பாடுவோம்; நடிப்போம்.**

குருவிக் குஞ்சே குருவிக் குஞ்சே
எங்கே போகிறாய்?
கொத்திக் கொத்தித் தானியத்தைத்
தின்னப் போகிறேன்.

சின்ன அணில் பிள்ளை நீயும்
எங்கே போகிறாய்?
வண்ண மாம்பழத்தை நானும்
தின்னப் போகிறேன்.

ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி
எங்கே போகிறாய்?
ஆலிலையும் கோரைப் புல்லும்
தின்னப் போகிறேன்.

செல்லப் பாப்பா செல்லப் பாப்பா
எங்கே போகிறாய்?
பள்ளிக்கூடம் சென்று நானும்
படிக்கப் போகிறேன்.



## செயற்பாடு 7

**படத்தை அவதானிப்போம்; கலந்துரையாடுவோம்.**



## செயற்பாடு 8

6

**ஆசிரியரின் உதவியுடன் செவிமடுப்போம்; வாசிப்போம்.**

### மிருகக்காட்சிச்சாலையில் ..



சிவா : அதோ மிருகக்காட்சிச்சாலை.
வாருங்கள் போவோம்.

கீதா : சரி, போவோம்.

சிவா : அங்கே கிளிகள் ....!
அவை அழகாகப் பழத்தைக் கொத்திக் கொத்தி
தின்கின்றன.

ஜனனி : சிவா, கீதா ...இங்கே பாருங்கள். ஒரு பெரிய யானை
அசைந்து அசைந்து வருகின்றது.

கீதா : எனக்குப் பயமாக இருக்கின்றது.

சிவா : பயப்பட வேண்டாம். அது ஒன்றும் செய்யாது.

கீதா : இந்தப் பக்கம் குரங்குகள் தாவித் தாவித்
திரிகின்றன. அதோ! அதோ! அது, சிறுவனின்
தொப்பியை எடுக்கின்றது.

ஜனனி : ஐயோ பாவம்..!

சிவா : குகையில் பயங்கரமான சிங்கம் ஒன்று அங்குமிங்கும்
அலைகின்றது.

ஜனனி : அதோ! அதோ! மான்குட்டிகள். அவை துள்ளித்
துள்ளி விளையாடுகின்றன.


கீதா : அதோ எங்கள் ஆசிரியர் வருகின்றார், போவோம்.

## செயற்பாடு 9


**மிருகக்காட்சிச்சாலையில் நண்பர்கள் பார்த்தவற்றை ஒழுங்கு படுத்துவோம்; இலக்கமிடுவோம்.**













## செயற்பாடு 10

பாத்திரமேற்று உரையாடுவோம்.

## செயற்பாடு 11

**ஆசிரியர் வழங்கும் அறிவுறுத்தல்களைச் செவிமடுப்போம்; செய்து காட்டுவோம்.**

- கிளிகள் பழத்தைக் கொத்திக் கொத்தித் தின்கின்றன.
- யானை அசைந்து அசைந்து வருகின்றது.
- சிங்கம் அங்குமிங்கும் அலைகிறது.
- மான்கள் துள்ளித் துள்ளி விளையாடுகின்றன.



## செயற்பாடு 12

**பின்வரும் சொற்களை வாசிப்போம்; வகைப்படுத்தி எழுதுவோம்.**

***முயல், குதிரை, கழுதை, மைனா, ஆமை, கரடி, புறா, புலி, யானை, பசு, நாய், கிளி, பூனை, பன்றி, சிங்கம், மயில், மான், தவளை, முதலை.***

| வீட்டில் | காட்டில் | வீட்டிலும் காட்டிலும் |
|---|---|---|
| | | |
| நீரில் | நிலத்தில் | நீரிலும் நிலத்திலும் |
| | | |



## செயற்பாடு 13

**செல்லப் பிராணியைப் பற்றி எழுதுவோம்; நண்பருடன் கலந்துரையாடுவோம்.**

பெயர் - ____________________


நிறம் - ____________________

விருப்பமான உணவு - ____________________



## செயற்பாடு 14

**கண்டுபிடிப்போம்.**




### இடமிருந்து வலம்

1. காட்டில் வாழும் ஆபத்தான மிருகம்.
2. நீரில் வாழும்.
3. நீரிலும், நிலத்திலும் வாழும்.
4. பச்சை நிறப் பறவை.

### மேலிருந்து கீழ்


1. தேனை விரும்பி உண்ணும் காட்டு மிருகம்.
2. உருவத்தின் பெரிய மிருகம்.
3. வீட்டிலும், காட்டிலும் வாழும் மிருகம்.
4. சாதுவான மிருகம்.



# செவிமடுப்போம்
# உச்சரிப்போம்



7




| ச – ஸ | ச – ச | ச – ஜ |
|---|---|---|
| சொற்கள் | பூச்சாடி | குருவிக்குஞ்சு |
| வாசம் | நட்சத்திரம் | இஞ்சி |
| மேசை | காட்சி | மஞ்சள் |
| சிமிட்டி | மிருகக்காட்சிச்சாலை | குஞ்சு |
| ருசித்து | முயற்சி | பஞ்சு |



## දැන් මට පුළුවන්

| | ✓ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍ය |
| 1. க்கள், ங்கள் භාවිත කිරීම | | | |
| 2. සුරතලා ගැන විස්තර කිරීම | | | |
| 3. ச අක්ෂරයේ ස,ජ,ච යන උච්චාරණ වෙනස්කම් හඳුනා ගැනීම | | | |
| 4. සත්තු වත්ත ගැන විස්තර කිරීම | | | |



# 3 விடிந்து விட்டது




**படம் பார்த்துக் கலந்துரையாடுவோம்.**



**செயற்பாடு 1**

**கேள்விக்கு விடை எழுதுவோம்.**

- இது என்ன காட்சி? ________________
- இங்கு இருப்பவர்கள் யாவர்? ________________
- ஆசிரியர் என்ன செய்கிறார்? ________________



## செயற்பாடு 2

8

**ஆசிரியரின் உதவியுடன் உரையாடலைச் செவிமடுப்போம்; வாசிப்போம்.**

### வகுப்பறை

ஆசிரியர் -: கீதா இன்றைக்கு வகுப்பில் எத்தனை பிள்ளைகள்?

கீதா -: முப்பத்து மூன்று பிள்ளைகள் ரீச்சர்.

ஆசிரியர் -: ஆண் பிள்ளைகள் எத்தனை பேர்?

கீதா -: பதினைந்து பேர்.

ஆசிரியர் -: பெண் பிள்ளைகள் பதினெட்டுப் பேரா?

கீதா -: ஆம் ரீச்சர்.

ஆசிரியர் -: எல்லோருக்கும் தமிழ்ப் புத்தகம் கிடைத்ததா?


கீதா -: எனக்குக் கிடைக்கவில்லை ரீச்சர்.

ஜனனி -: எனக்கும் கிடைக்கவில்லை ரீச்சர்.

ஆசிரியர் -: இன்னும் எத்தனை பேருக்குத் தமிழ் புத்தகம் வேண்டும்?

கீதா -: நான் எண்ணுகிறேன் ரீச்சர். புத்தகம் இல்லாதவர்கள் கையைத் தூக்குங்கள்.

ஒன்று, இரண்டு, மூன்று... இருபத்திரண்டு பேருக்குப் புத்தகம் இல்லை.



## சொல் அறிமுகம்

| | |
|---|---|
| **இன்றைக்கு** | - අද |
| **வகுப்பில்** | - පන්තියේ |
| **எல்லோரும்** | - හැමෝ ම |
| **கிடைத்ததா** | - ලැබුණා ද |
| **எத்தனை பேருக்கு** | - කී දෙනෙකුට ද ? |
| **எண்ணுகிறேன்** | - ගණන් කරමි |
| **இல்லாதவர்கள்** | - නොමැති අය |
| **தூக்குங்கள்** | - ඔසවන්න |

### செயற்பாடு 3

**சரியான விடையைத் தெரிவு செய்வோம்; கோடிடுவோம்.**

1. வகுப்பில் உள்ள மொத்த மாணவர்கள்.

   அ) 35 ஆ) 33 இ) 37

2. வகுப்பில் உள்ள பெண் பிள்ளைகள்.

   அ) 18 ஆ) 14 இ) 12

3. தமிழ்ப் புத்தகம் கிடைக்காத மாணவர்களின் எண்ணிக்கை.

   அ) 27 ஆ) 21 இ) 22



## செயற்பாடு 4

9

**பின்வரும் இலக்கங்களைச் செவிமடுப்போம்; வாசிப்போம்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | - | பதினொன்று | 16 | - | பதினாறு |
| 12 | - | பன்னிரண்டு | 17 | - | பதினேழு |
| 13 | - | பதின்மூன்று | 18 | - | பதினெட்டு |
| 14 | - | பதின்னான்கு | 19 | - | பத்தொன்பது |
| 15 | - | பதினைந்து | 20 | - | இருபது |



## செயற்பாடு 5

வகுப்பில் உள்ள மாணவர்களை வரிசைப்படுத்துவோம்; ஒவ்வொருவராக எண்ணிப் பயற்சி பெறுவோம்.


## செயற்பாடு 6

- ஐவர் கொண்ட குழுவில் இணைவோம்.
- தாயக்கட்டையை மூன்று தடவை உருட்டுவோம்.
- வரும் எண்களைப் பின்வரும் முறையில் கூறிப் பழகுவோம்.

(உ+ம்) 3 + 6 + 5 = 14 பதினான்கு

## செயற்பாடு 7

**ஆசிரியர்கூற இலக்கங்களைச்செவிமடுப்போம்;இணைப்போம்; மறைந்து நிற்கும் உருவத்தைக் கண்டுப்பிடித்து எழுதுவோம்.**




★ இங்கே மறைந்து இருப்பது ______________ ஆகும்.

## செயற்பாடு 8

**பின்வரும் படங்களை அவதானிப்போம்; படங்களில் உள்ள இலக்கங்களைக் கூறுவோம்.**















## செயற்பாடு 9

10

**ஆசிரியரின் உதவியுடன் பின்வரும் இலக்கங்களைச் செவிமடுப்போம்; வாசிப்போம். சோடிகளாக இணைந்து இலக்கங்களைக் கூறுவோம்.**

20 - இருபது

21 - இருபத்து + ஒன்று ⟶ இருபத்தொன்று

22 - இருபத்து + இரண்டு ⟶ இருபத்திரண்டு

23 - இருபத்து + மூன்று ⟶ இருபத்துமூன்று

24 - இருபத்து + நான்கு ⟶ இருபத்துநான்கு

25 - இருபத்து + ஐந்து ⟶ இருபத்தைந்து

26 - இருபத்து + ஆறு ⟶ இருபத்தாறு

27 - இருபத்து + ஏழு ⟶ இருபத்தேழு

28 - இருபத்து + எட்டு ⟶ இருபத்தெட்டு

29 - இருபத்து + ஒன்பது ⟶ இருபத்தொன்பது



## செயற்பாடு 10

11

**ஆசிரியரின் உதவியுடன் செவிமடுப்போம்; வாசிப்போம்.**

20 - இருபது ⟶ 20 > இருபத்து

30 - முப்பது ⟶ 30 > முப்பத்து


40 - நாற்பது ⟶ 40 > நாற்பத்து

50 - ஐம்பது ⟶ 50 > ஐம்பத்து

60 - அறுபது ⟶ 60 > அறுபத்து

70 - எழுபது ⟶ 70 > எழுபத்து

80 - எண்பது ⟶ 80 > எண்பத்து







**ஆசிரியரின் உதவியுடன் 30 முதல்; இலக்கங்களைச் செவிமடுப்போம்; வாசிப்போம்; இடைவெளி நிரப்புவோம்.**

| | | | |
|---|---|---|---|
| 30 | → முப்பது | 36 | → ________ |
| 31 | → முப்பத்தொன்று | 37 | → ________ |
| 32 | → ________ | 38 | → ________ |
| 34 | → ________ | 39 | → ________ |
| 35 | → முப்பத்தைந்து | | |




**பின்வரும் இலக்கங்களைச் வாசிப்போம்; இடைவெளி நிரப்புவோம்.**

| | |
|---|---|
| 45 ________ | 64 ________ |
| ____ ஐம்பத்து மூன்று | ____ ஐம்பத்தெட்டு |
| ____ அறுபத்தொன்பது | ____ ஐம்பத்திரண்டு |
| 77 ________ | 81 ________ |
| 86 ________ | 72 ________ |



## செயற்பாடு 13

**படத்தை அவதானிப்போம்; கலந்துரையாடுவோம்.**




**கீதாவின் காலைக் கடன்களை ஒழுங்குபடுத்துவோம்; இலக்கம் இடுவோம்.**

1. பெற்றோரை வணங்குகின்றாள். ☐
2. முகம் கழுவுகின்றாள். ☐
3. கடவுளை வணங்குகின்றாள். ☐
4. தேநீர் குடிக்கின்றாள். ☐
5. காலை உணவு உண்கின்றாள். ☐
6. காலையில் எழுகிறாள். ☐
7. சீருடை அணிகின்றாள். ☐
8. பல் துலக்குகின்றாள். ☐
9. பாடசாலைக்குச் செல்கின்றாள். ☐
10. புத்தகப் பையை எடுக்கின்றாள். ☐

## செயற்பாடு 14

சோடிகளாக இணைவோம்; காலைக்கடன்களை ஒருவர் செய்து காட்ட மற்றவர் கண்டுபிடிப்போம்.



## செயற்பாடு 15

**ஆசிரியரின் உதவியுடன் கீதா கூறுவதைச் செவிமடுப்போம்.**



நான் காலையில் ஐந்து மணிக்கு எழுவேன். பல் துலக்குவேன். முகம் கழுவிக் குளிப்பேன். ஆடைகளை அணிவேன். கடவுளை வணங்குவேன். தேநீர் குடிப்பேன். காலை ஆறு இருபதுக்குக் காலை உணவைச் சாப்பிடுவேன். புத்தகப் பையை எடுப்பேன். பெற்றோரை வணங்குவேன். ஆறுநாற்பதுக்குப் பாடசாலைக்குப் போவேன்.

**கீதா பின்வரும் நேரங்களில் என்ன செய்கிறாள்?**







ஐந்து மணி

______________________



ஐந்து முப்பது

______________________



ஆறு இருபது

______________________



ஆறு நாற்பது

______________________



## செயற்பாடு 16

காலைக் கடன்களைப் பற்றி நண்பர்களுடன் கலந்துரையாடுவோம்; கடிகாரமொன்றைத் தயாரித்துக் கொள்வோம்; ஆசிரியர் நேரத்தைக் கூறச் செவிமடுப்போம்; கடிகாரத்தில் நேரத்தைக் காட்டுவோம்.

## செயற்பாடு 17

சோடிகளாகுவோம்; ஒருவர் நேரத்தைக் கூற; அடுத்தவர் கடிகாரத்தில் வரைந்து காட்டுவோம்.

## செயற்பாடு 18


**படம் பார்ப்போம்; பேசுவோம்; வாசிப்போம்.**

**நான் கீதா**



5.00  எழும்புகின்றேன்.

5.10  முகம் கழுவுகின்றேன்.

5.15  கடவுளை வணங்குகின்றேன்.

5.30  தேநீர் குடிக்கின்றேன்.

6.20  உணவு உண்கின்றேன்.

6.30  புத்தகப் பையை எடுக்கின்றேன்.

6.40  பாடசாலைக்குப் போகின்றேன்.

உ-ம் : நான் ஐந்து மணிக்கு எழும்புகின்றேன்.

## செயற்பாடு 19

**சோடிகளாக இணைவோம்; மேலே தரப்பட்ட அட்டவணையை அவதானிப்போம்; வினாக்கள் கேட்போம். விடைகளை எழுதுவோம்.**

*உ-ம் : கீதா ஐந்து மணிக்கு என்ன செய்கின்றார்?*

*கீதா ஐந்து மணிக்கு எழும்புகின்றார்.*

*கீதா ஐந்து பத்துக்கு என்ன செய்கின்றார்?*

......................................................

*கீதா ஐந்து பதினைந்துக்கு என்ன செய்கின்றார்?*

..............................................................

## செயற்பாடு 20

**பின்வரும் வாக்கியங்களை உரத்து வாசிப்போம்; வேறுபாட்டை அறிந்து கொள்வோம்.**



சிவா படிக்கிறான்.



கீதா படிக்கிறாள்.



அவர்கள் படிக்கிறார்கள்.



## செயற்பாடு 21

**இடைவெளிகளை நிரப்பி முழுமைப்படுத்துவோம்.**

1. சிவா குடிக்கிறான்.

   தம்பி ____குடிக்கிறான்.____

2. சிறுவன் குளிக்கிறான்.

   தங்கை ______________

3. ஜனனி எழுதுகிறாள்.

   அவள் ______________

4. தம்பி ஓடுகிறான்.
   தங்கை ஓடுகிறாள்.

   அவர்கள் ______________

5. ஜனனி சாப்பிடுகிறாள்.

   மாலா ______________



# செவிமடுப்போம்
# உச்சரிப்போம்



ட

ඩ ට

12

| ட - ඩ | ட - ට |
|---|---|
| படம் | பட்டம் |
| பாடம் | பாட்டி |
| படங்கள் | கூட்டம் |
| பாடசாலை | எட்டு |
| நிமிடம் | பதினெட்டு |
| கடவுள் | |



## දැන් මට පුළුවන්

| | ✓ ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍ය |
| 1. 1 සිට 80 දක්වා ඉලක්කම් කීම සහ ලිවීම | | | |
| 2. වේලාව කීම | | | |
| 3. මගේ දෛනික වැඩ කටයුතු ගැන තවත් අයෙකුට කීම | | | |
| 4. ட අක්ෂරයේ ඩ, ට යන උච්චාරණ වෙනස්කම් හඳුනා ගැනීම | | | |




# 4 ஸ்ரீ விஹாருக்குச் செல்வோம்





## செயற்பாடு 1

**விலைப்பட்டியலைப் பார்ப்போம்; பேசுவோம்; வாசிப்போம்.**

| | |
|---|---|
| உழுந்து வடை | 20 ரூபாய் |
| பருப்பு வடை | 15 ரூபாய் |
| கீரை வடை | 25 ரூபாய் |

| | |
|---|---|
| தோசை | 30 ரூபாய் |
| நெய்த் தோசை | 80 ரூபாய் |
| மசாலாத் தோசை | 75 ரூபாய் |
| வெங்காயத் தோசை | 70 ரூபாய் |

| | |
|---|---|
| இட்டலி | 25 ரூபாய் |
| பராட்டா | 20 ரூபாய் |
| உப்புமா | 50 ரூபாய் |
| பொங்கல் | 45 ரூபாய் |
| பிட்டு | 30 ரூபாய் |

| | |
|---|---|
| மோர் | 35 ரூபாய் |
| பாயாசம் | 60 ரூபாய் |
| ஐஸ் கிரீம் | 80 ரூபாய் |
| பலூடா | 80 ரூபாய் |

**சோடிகளாக இணைவோம்; வினா எழுப்புவோம்; விடையளிப்போம்.**

1. உங்களுக்கு என்ன சாப்பாடு வேணும்? ________________
2. உங்களுக்குக் குடிக்க என்ன வேணும்? ________________
3. மசாலாத் தோசையின் விலை என்ன? ________________
4. மோர் என்ன விலை? ________________

## செயற்பாடு 2

**படத்தைப் பார்ப்போம்; உரையாடுவோம்.**



**பின்வரும் வினாக்களை வினவிக் கலந்துரையாடுவோம்.**

1. இது எந்த இடம்? ____________________

2. இங்கு எத்தனை பேர் உள்ளனர்? ____________________

3. இங்கு யார் யார் இருக்கிறார்கள்? ____________________



## செயற்பாடு 3

13

**ஆசிரியர் உதவியுடன் உரையாடலைக் கேட்போம்; வாசிப்போம்.**

வெயிட்டர் : வாங்க, இருங்க. என்ன சாப்பிடவேணும்?

அப்பா : என்ன சாப்பிடுவோம்?

சிவா : சாப்பிட வேண்டாம். ஏதாவது குடிப்போம்.

அம்மா : எனக்குச் சரியான தாகம், எனக்கு மோர் வேணும்.

சங்கீத் : எனக்கும் மோர்.

அப்பா : எனக்குச் சரியான பசி, எனக்கு வெங்காயத் தோசை தான் வேணும்.

அசங்க : எனக்கு ஐஸ்கிரீம்.

சிவா : எனக்குப் பாயாசம்.

அசங்க : பாயாசமா?


சிவா : ஓ ... பாயாசம் நல்ல ருசி. குடித்துப் பாருங்கள்.

அசங்க : அப்ப எனக்கும் பாயாசம் தாங்க.

அப்பா : கொஞ்சம் வாங்க, எங்களுக்கு இரண்டு வெங்காயத் தோசை, இரண்டு பாயாசம், இரண்டு மோர் கொண்டு வாங்க.

வெயிட்டர்: சரி சேர், கொஞ்ச நேரம் இருங்க.

அப்பா : சரி சரி.



சிவா : பாயாசம் எப்படி ?

அசங்க : ம்ம்... பாயாசம் நல்ல ருசி.

அம்மா : சனிக்கிழமை வீட்டுக்கு வாங்க. நாங்கள் பாயாசம் செய்வோம்.

சங்கீத் : அசங்க, அப்ப வாங்க.

அசங்க : சரி சரி.

அப்பா : பில் கொண்டு வாங்க.

வெயிட்டர்: இந்தாங்க பில்.

**சொல் அறிமுகம்**

| | | |
|---|---|---|
| **ஏதாவது** | - | මොනවා හරි |
| **தாகம்** | - | පිපාසය |
| **ருசி** | - | රසයි |
| **கொஞ்சம்** | - | ටිකක් |
| **பாயாசம்** | - | සවි ආදියෙන් සාදන ලද බීමක් |
| **செய்வோம்** | - | සාදමු |



**செயற்பாடு 4**

குழுக்களாக இணைவோம். நடித்துக் காட்டுவோம்.

## செயற்பாடு 5

**சரியாயின் சரி (✓) எனவும், பிழையாயின் பிழை (✗) எனவும் அடையாளம் இடுவோம்.**

1. அசங்கவுக்குச் சரியான பசி. ☐
2. அம்மாவுக்குச் சரியான தாகம். ☐
3. அப்பாவுக்கு மசாலாத் தோசை வேணும். ☐
4. அம்மாவுக்குப் பாயாசம் செய்யத் தெரியும். ☐

## செயற்பாடு 6

உங்களுக்கு என்ன சாப்பிட விருப்பம்?
உங்களுக்கு என்ன சாப்பிட விருப்பம் இல்லை?

எனக்கு — தோசை / வடை / இட்லி — சாப்பிட விருப்பம்/விருப்பம் இல்லை. ☺ ☹

எனக்கு — மோர் / ஐஸ்கிரீம் / பாயாசம் — குடிக்க விருப்பம்/ விருப்பம் இல்லை. ☺ ☹

## செயற்பாடு 7

**எங்களுக்குத் தெரிந்த உணவு வகைகளை அட்டவணைப் படுத்துவோம்.**

| உறைப்பு | இனிப்பு |
|---|---|
| ________________ | ________________ |
| ________________ | ________________ |
| ________________ | ________________ |
| ________________ | ________________ |
| ________________ | ________________ |

## செயற்பாடு 8

**ஆசிரியர் உதவியுடன் செவிமடுப்போம்; வாசிப்போம்.**

அசங்க : அம்மா எங்கே?

சிவா : பாயாசம் செய்யப் போகின்றார்.



அசங்க : அம்மா பாயாசம் செய்யச் சொல்லித் தாங்க.

அம்மா : சரி சரி. வாங்க சொல்லித் தருகிறேன்.





**தேவையான பொருட்கள்**

$\frac{1}{2}$ கப் சவ்வரிசி, $\frac{1}{4}$ கப் சேமியா, $\frac{3}{4}$ கப் சர்க்கரை, $\frac{1}{4}$ கப் நெய், $\frac{1}{2}$ கப் பால், முந்திரிப்பருப்பு (தேவையான அளவு), உலர்ந்த திராட்சை (தேவையான அளவு)



## செயற்பாடு 9

**பாயாசம் செய்யத் தேவையான பொருட்களை அறிந்து கொள்வோம்; இணைப்போம்.**

| | |
|---|---|
|  | சர்க்கரை |
|  | பால் |
|  | முந்திரிப்பருப்பு |
|  | திராட்சை |
|  | சவ்வரிசி |
|  | சேமியா |
|  | நெய் |



## செயற்பாடு 10

**துலங்குவோம்; கட்டளைகளுக்கு ஏற்பப் பாயாசம் செய்வோம்.**

1. சவ்வரிசியைக் கழுவுங்கள்.
2. $1\frac{1}{4}$ கப் தண்ணீர் எடுங்கள்.
3. தண்ணீரைக் கொதிக்க வையுங்கள்.
4. சவ்வரிசியை அதில் போடுங்கள்.
5. சேமியாவை நெய்யில் வறுத்துக் கொள்ளுங்கள்.
6. சவ்வரிசியுடன் சேருங்கள்.
7. சவ்வரிசி நன்றாக வெந்தபின்; பாலையும், சர்க்கரையையும் சேர்த்துக் கொதிக்க வையுங்கள்.
8. நெய்யில் முந்திரிப்பருப்பையும் உலர்ந்த திராட்சையையும் வறுத்துக் கொள்ளுங்கள்.
9. பாயாசத்தில் சேருங்கள்.


இலவசப் பாடநூல்


**குழு நிலையில் கலந்துரையாடுவோம்; பாயாசம் செய்வதை ஒழுங்குபடுத்தி இலக்கம் இடுவோம்.**




















## செயற்பாடு 11

குழுவாக இணைவோம்; பாற்சோறு எவ்வாறு செய்வது என்பது பற்றிக் கலந்துரையாடுவோம்; வகுப்பில் முன்வைப்போம்.

### சொல் அறிமுகம்

**கழுவுங்கள்** - සෝදන්න

**எடுங்கள்** - ගන්න

**போடுங்கள்** - දාන්න

**வறுத்துக் கொள்ளுங்கள்** - බැදගන්න

**சேருங்கள்** - එකතු කරන්න

**கொதிக்க வையுங்கள்** - රත්වෙන්න තබන්න



# செவிமடுப்போம் உச்சரிப்போம்

த

ත | ද

14

| த - ත | த - ද |
| --- | --- |
| தாருங்கள் | அந்த |
| தாகம் | இந்த |
| தெரியும் | தந்தை |
| திராட்சை | உழுந்து |
| தோசை | முந்திரிப்பருப்பு |
| எத்தனை | |





## දැන් මට පුළුවන්

| | ✓ ලකුණු කරන්න | | |
| --- | --- | --- | --- |
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍ය |
| 1. ආපන ශාලාවක දී, කෑම සහ බීම ඇණවුම් කිරීම | | | |
| 2. මා කැමති කෑමක් බීමක් ගැන යහළුවෙකු සමග කතා බහ කිරීම | | | |
| 3. කෑම වට්ටෝරුවක් කියවා තේරුම් ගැනීම | | | |
| 4. කෑම වට්ටෝරුවක් ලිවීම සහ එය විස්තර කිරීම | | | |
| 5. த අක්ෂරයේ ත, ද යන උච්චාරණ වෙනස්කම හඳුනා ගැනීම | | | |



# 5 நான் ரசித்த கதை



படம் பார்த்துக் கலந்துரையாடுவோம்.



## செயற்பாடு 1

15

ஆசிரியர் உதவியுடன் பாடலைச் செவிமடுப்போம்; வாசிப்போம்; பாடலைப் பாடுவோம்.

பாப்பா பாப்பா கதை கேளு
காக்கா நரியின் கதை கேளு
தாத்தா பாட்டி சொன்ன கதை
அம்மா அப்பா கேட்ட கதை.

## செயற்பாடு 2

**விடை கூறுவோம்.**

1. *படத்தில் காணப்படும் பிராணிகள் எவை?*

   i. ________________ ii. ________________

2. *பாட்டில் கூறப்படுபவர்கள் யாவர்?*


   i. ________________ iii. ________________

   ii. ________________ vi . ________________

## செயற்பாடு 3

**படங்களுக்குப் பொருத்தமான வாக்கியங்களைக் கண்டு பிடிப்போம்; ஆங்கில எழுத்துக்களைப் பொருத்தமான கட்டங்களில் இடுவோம்.**




3
கறுப்புக் காகம் ஒன்று பறந்து
வருகின்றது.
C


4
அமர்கின்றது.
மரத்தில் போய் காண்கின்றது.
தடித்த நரி அதைக் நினைக்கிறது.
வடையைப் பறிக்க
D


5
பார்க்கின்றது.
அங்கும் இங்கும் எடுக்கின்றது.
வடையை மெல்ல
E


6
சுடுகிறார்.
ஏழைப் பாட்டி வடை
வாசனை வருகின்றது.
F

7



ஒரு பெரிய காட்டுக்கு அருகில் அழகிய கிராமம் இருக்கின்றது.

G

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| காடு | - | කැළෑව |
| மரம் | - | ගස |
| குரல் | - | කටහඬ |
| கீழே | - | බිම |
| கிராமம் | - | ගම |
| மெல்ல | - | සෙමෙන් |
| பெரிய | - | ලොකු |
| அருகில் | - | අසල/ළඟ |
| இனிமையாக | - | මිහිරි ලෙස |
| வாசனை | - | සුවඳ |
| தடித்த | - | මහත |
| ஏழை | - | දුප්පත් |
| கறுப்பு | - | කළු |

## செயற்பாடு 4

**கதையில் காணப்படும் வினைச் சொற்களைக் கண்டு பிடிப்போம்; கூறுவோம்; எழுதுவோம்.**

1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________
5. ______________________

## செயற்பாடு 5

**இடைவெளிகளை நிரப்புவோம்.**

1. அம்மா பார்க்கின்றார்.

   காகம் பார்க்கின்றது.

2. அப்பா எடுக்கின்றார்.

   காகம் எடு______________

3. தாத்தா காண்கின்றார்.

   நரி காண்______________

4. அக்கா இருக்கின்றார்.

   நரி இரு______________

5. தங்கை ஏமாந்து விடுகின்றார்.

   காகம் ஏமாந்து விடு______________

## செயற்பாடு 6

**வினைச் சொற்களைத் தெரிவு செய்து இடைவெளிகளை நிரப்புவோம்.**


நிற்கின்றார்
பறக்கின்றது
பாய்கின்றது
ஓடுகின்றான்
முறிகின்றது
சாப்பிடுகின்றது
குடிக்கின்றான்
சாப்பிடுகின்றார்
ஓடுகின்றது
குடிக்கின்றது
விளையாடுகின்றான்

| அவன் | அவர் | அது |
|---|---|---|
| | | |

1. தம்பி பால் ______________



2. பூனை பால் ______________




3. அப்பா வடை ______________ 

4. நரி வடை ______________ 


5. சிறுவன் ______________ 

6. நாய் ______________ 

7. குதிரை ______________ 

8. மாணவன் ______________ 

9. மரம் ____________



10. பட்டம் வானில் ____________





11. அப்பா ____________

## செயற்பாடு 7

**சோடிகளாக இணைவோம்; படங்களை ஒழுங்குபடுத்திக் கதை ஆக்குவோம்.**




















| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| | | | | | |

## செயற்பாடு 8

**கதையை ஒழுங்குப்படுத்துவோம்; இலக்கமிடுவோம்; கதையைக் கூறுவோம்.**

அது மகிழ்ச்சி அடைந்தது. ☐

காகத்திற்குத் தண்ணீர் எட்ட வில்லை. அது யோசித்தது. ☐

தண்ணீர் தேடி அலைந்தது. ☐

தண்ணீர்க் குடத்தைக் கண்டது. ☐

குடத்தின் அடியில் சிறிது நீர் இருந்தது. ☐

காகம் தாகம் தீரக் குடித்தது. ☐

தண்ணீர் மேலே வந்தது. ☐

காகத்திற்குத் தாகம். ☐

குடத்திற்குள் ஒவ்வொரு கற்களாய்க் கொண்டு வந்து போட்டது. ☐

குடத்தை எட்டிப் பார்த்தது. ☐

## செயற்பாடு 9

**கீழே வரும் கதையை வாசிப்போம்; அடைமொழிகளைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புவோம்.**

ஒரு பெரிய காடு. அருகில் அழகிய கிராமம் இருக்கின்றது. ஏழைப் பாட்டி வடை சுடுகின்றார். வாசனை வருகின்றது. கறுப்புக் காகம் ஒன்று பறந்து வருகின்றது. அங்கும் இங்கும் பார்க்கின்றது. வடையை மெல்ல எடுக்கின்றது. உயர்ந்த மரத்தில் போய் அமர்கின்றது. தடித்த நரி அதைக் காண்கின்றது. வடையைப் பறிக்க நினைக்கிறது. காக்கா உன் குரல் இனிமையாக இருக்கின்றது. பாட்டு ஒன்று பாடு என்கின்றது. காகம் ஏமாந்து விடுகின்றது.

1.______________________ காகம்

2.______________________ கிராமம்

3.______________________ காடு


4.______________________ நரி

5.______________________ மரம்



## செயற்பாடு 10


**எதிர்க் கருத்துச்சொற்களை இனங்கண்டு இடைவெளிகளை நிரப்புவோம்.**



1.  வெள்ளை ____________ 

2.  சிறிய ____________ 

3.  குளிரான ____________ 

4.  மெலிந்த ____________ 

5.  அழகற்ற ____________ 

6.  கட்டையான ____________ 

## செயற்பாடு 11

**படித்த அடைமொழிகளைக் கண்டுபிடிப்போம்; வட்டமிடுவோம்; எழுதுவோம்.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க | பெ | ரி | ய | க | அ | மெ | உ |
| ட் | ஏ | ழை | த | று | ழ | லி | ய |
| டை | சூ | சி | டி | ப் | கா | ந் | ர |
| யா | டா | ன் | த் | பு | ன | த | மா |
| ன | ன | ன | த் | வெ | ள் | ளை | ன |

1. பெரிய ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________
5. ____________________
6. ____________________
7. ____________________
8. ____________________
9. ____________________
10. ____________________

# செவிமடுப்போம் உச்சரிப்போம்





16

## வ - ව

வடை

சிறுவன்

மாணவன்

வானில்

வகுப்பறை

வெள்ளை

வாசிப்போம்

சிவப்பு

வீடு

வட்டம்




## දැන් මට පුළුවන්

| | ✓ ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍ය |
| 1. குதிரை ஓடுகின்றது. සහ மாணவன் ஓடுகின்றார். යන දෙකෙහි වෙනස හඳුනා ගැනීම | | | |
| 2. பெரிய மரம், சிறிய மரம் ආදිය භාවිත කිරීම | | | |
| 3. පින්තූර බලා සරල කතාවක් කීම | | | |



# 6 ஓய்வு நேரத்தில்



## செயற்பாடு 1

17

படம் பார்ப்போம்; ஆசிரியரின் உதவியுடன் செவிமடுப்போம்; படத்தில் உள்ளவர்களின் பொழுதுபோக்கை இனங்காண்போம்; அதன் இலக்கத்தை இடுவோம்.











**வாசிப்போம்; சரி பிழை பார்ப்போம்.**

1 நான் தனு. நான் கொழும்பில் இருக்கின்றேன். எனக்குப் பிடித்த பாடகர் ஹரிஹரன்.

2 நான் மீரா. எனக்கு இசைக்கருவிகளை இசைக்க விருப்பம். நான் ஒவ்வொரு நாளும் அப்பாவுடன் வயலின் வாசிப்பேன்.

3 என் பெயர் கிருஷ்ணா. எனக்கு 12 வயது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் நான் கிரிக்கட் விளையாடுவேன்.

4 நான் ரமேஸ். எனது ஊர் யாழ்ப்பாணம். பாடசாலை விட்டு வீடு வந்த பின் Computer games விளையாடுவேன்.

5 எனது பெயர் வித்தியா. எனக்கு வயது 13 ஓய்வு நேரங்களில் T.V பார்க்க விருப்பம்.

## செயற்பாடு 2

**படங்களை அவதானிப்போம்; செய்து காட்டுவோம். செயல்களை வாசிப்போம்;**


நீந்துதல்


பாடுதல்


ஆடுதல்



வாசித்தல்


விளையாடுதல்


Tv (தொலைக்காட்சி) பார்த்தல்


பாடல் கேட்டல்


கணினியில் விளையாடுதல்


நண்பர்களுடன் கதைத்தல்

## செயற்பாடு 3

**செயற்பாடு 2 இல் இருந்து எமக்குச் செய்ய விருப்பமானவற்றையும் விருப்பம் இல்லாத வற்றையும் இங்கே எழுதுவோம்.**



1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________



1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________

**பின்வரும் சொற்களை அவதானிப்போம்; வாசிப்போம்.**

| | | |
|---|---|---|
| நீந்து | - நீந்துதல் | - நீந்த |
| பாடு | - பாடுதல் | - பாட |
| ஆடு | - ஆடுதல் | - ஆட |
| விளையாடு | - விளையாடுதல் | - விளையாட |
| கதை | - கதைத்தல் | - கதைக்க |
| வாசி | - வாசித்தல் | - வாசிக்க |
| சிரி | - சிரித்தல் | - சிரிக்க |
| பார் | - பார்த்தல் | - பார்க்க |
| கேள் | - கேட்டல் | - கேட்க |

உதாரணம்

எனக்கு — பாட / ஆட / வாசிக்க — விருப்பம் / விருப்பம் இல்லை.

## செயற்பாடு 4

**தொலைபேசி உரையாடலை வாசிப்போம்; பொருத்தமான விடைகளைக் கண்டறிவோம்; இலக்கம் இடுவோம்.**

(A) நான் நீந்தப் போறன். நீங்களும் வருவீங்களா?

(B) நான் ZOO க்கு (மிருகக்காட்சிச்சாலைக்கு) போறன். நீங்களும் வருவீங்களா?

(C) நான் கோயிலுக்குப் போறன். நீங்களும் வருவீங்களா?

(D) நான் கிரிக்கட் விளையாடப் போறன். நீங்களும் வருவீங்களா?

(1) எனக்கு நீந்த முடியாது. கோவிக்க வேண்டாம்.

(2) எனக்குச் சுகமில்லை. ஓட முடியாது.

(3) எந்தக் கோயிலுக்கு?

(4) ஆ... நல்லம். நானும் வாறன். யானை பார்க்க எனக்கு விருப்பம்.

| A | B | C | D |
|---|---|---|---|
| | | | |



## செயற்பாடு 5

**சோடிகளாகச் சேருவோம்; அட்டவணையில் உள்ள சொற்களைப் படிப்போம்; கலந்துரையாடுவோம்.**

| | | |
|---|---|---|
| சினிமா | கடற்கரை | சிறுவர் பூங்கா |
| ZOO (மிருகக்காட்சிச்சாலை) | கோயில் | நூல் நிலையம் |

- ● நாங்கள் கோயிலுக்குப் போவமா?
- ▲ சரி போவம். (+) / போக முடியாது. (-)

- ● ..........................................................................................
- ▲ ..........................................................................................

- ● ..........................................................................................
- ▲ ..........................................................................................

- ● ..........................................................................................
- ▲ ..........................................................................................

- ● ..........................................................................................
- ▲ ..........................................................................................

- ● ..........................................................................................
- ▲ ..........................................................................................

## செயற்பாடு 6

குழுவாக இணைவோம்; ஜனனியின் வேலைத்திட்டம் பற்றிக் கலந்துரையாடுவோம்.

### ஜனனியின் 16.05.2016 ஒரு வார வேலைத்திட்டம்

| | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| காலை | பாடசாலைக்குப் போவேன். | பாடசாலைக்குப் போவேன். | பாடசாலைக்குப் போவேன். | பாடசாலைக்குப் போவேன். | பாடசாலைக்குப் போவேன். | சங்கீத வகுப்புக்குப் போவேன். | அறநெறிப் பாடசாலைக்குப் போவேன். |
| மதியம் | பாடசாலையில் இருந்து வருவேன். | பாடசாலையில் இருந்து வருவேன். | பாடசாலையில் இருந்து வருவேன். | பாடசாலையில் இருந்து வருவேன். | பாடசாலையில் இருந்து வருவேன். | சங்கீத வகுப்பிலிருந்து வருவேன். | அறநெறிப் பாடசாலையில் இருந்து வருவேன். |
| மாலை | தமிழ் வகுப்பிற்குப் போவேன். | மைதானத்திற்குப் போவேன். | சினிமாவுக்குப் போவேன். | நூலகத்திற்குப் போவேன். | கோயிலுக்குப் போவேன். | பரத நாட்டிய வகுப்பிற்குப் போவேன். | கடற் கரைக்குப் போவேன். |

## செயற்பாடு 7

**சரி (✓) பிழை (✗) இடுவோம்.**

1. ஜனனி திங்கட்கிழமை மாலை மைதானத்திற்குப் போவார். ☐
2. புதன்கிழமை பரதநாட்டிய வகுப்பு இருக்கின்றது. ☐
3. வெள்ளிக்கிழமை ஜனனிக்கு அறநெறி வகுப்பு இருக்கின்றது. ☐
4. வியாழக்கிழமை காலையில் ஜனனி பாடசாலைக்குப் போவார். ☐
5. ஜனனி ஐந்து நாட்களும் பாடசாலைக்குப் போவார். ☐

## செயற்பாடு 8

**ஜனனியின் வேலைத்திட்டத்தைப் பார்த்து இடைவெளிகளை நிரப்புவோம்.**

| நேற்று முன்தினம் | நேற்று | இன்று | நாளை | நாளை மறுதினம் | வார இறுதி |
|---|---|---|---|---|---|
| ________ | ________ | புதன்கிழமை | ________ | ________ | ________ |



## செயற்பாடு 9

▲ சனிக்கிழமை என்ன செய்ய விருப்பம்?

- ● எனக்கு விளையாட விருப்பம்.
- ■ எனக்குப் படம் பார்க்க விருப்பம்.

நண்பர்களுடன் மற்றைய நாட்களைப் பற்றிக் கலந்துரையாடுவோம்.



## செயற்பாடு 10

18

**ஆசிரியர் உதவியுடன் பாடலைச் செவிமடுப்போம்; பாடுவோம்.**

திங்கள், செவ்வாய்,
புதன், வியாழன்
வெள்ளி நாட்களில்
பாலர் நாங்கள் பள்ளி சென்று
படித்திடுவோமே
நன்றாய் படித்திடுவோமே ,,
வெள்ளி வந்தால் பாலர் எமக்கு
ஒரே கொண்டாட்டம்.... ,,
சனியும், ஞாயிறும் பாலர் எமக்கு
விடுமுறை தானே!
எமக்கு விடுமுறை தானே!

# செவிமடுப்போம் உச்சரிப்போம்





19

| ல் - ල් | ழ் - ළ් | ள் - ළ් |
|---|---|---|
| பாடசாலை | தமிழ் | நீங்கள் |
| வயல் | வியாழன் | வெள்ளி |
| கோவில் | வாழைப்பழம் | திங்கள் |
| இல்லை | சனிக்கிழமை | நாட்கள் |
| கால் | இதழ் | வெள்ளை |



## දැන් මට පුළුවන්


| | ✓ ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍ය |
| 1. කැමති සහ අකමැති විනෝදාංශ ප්‍රකාශ කිරීම | | | |
| 2. සතියේ දවස්වල නම් කීම සහ ලිවීම | | | |
| 3. සතියේ කරන වැඩ ගැන යහළුවෙකුට කීම | | | |



# 7

# போவது எப்படி?

படம் பார்த்துக் கலந்துரையாடுவோம்.



## செயற்பாடு 1

**படங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கங்களைப் பொருத்தமான கட்டங்களில் இடுவோம்.**

| | | | |
|---|---|---|---|
| பிரதேச செயலகம் | ☐ | வங்கி | ☐ |
| தபாற் காரியாலயம் | ☐ | கோயில் | ☐ |
| புகையிரத நிலையம் | ☐ | நூலகம் | ☐ |
| கிறிஸ்தவ தேவாலயம் | ☐ | சந்தை | ☐ |
| பஸ் நிலையம் | ☐ | விஹாரை | ☐ |
| வைத்தியசாலை | ☐ | திருமண மண்டபம் | ☐ |
| பொலிஸ் நிலையம் | ☐ | பாடசாலை | ☐ |
| பொது மலசலக்கூடம் | ☐ | | |

## செயற்பாடு 2

20


ஆசிரியர் உதவியுடன் செவிமடுப்போம்; சரி, பிழை பார்ப்போம்; மீண்டும் கூறுவோம்.

## செயற்பாடு 3


**சரியான படத்தை அடையாளம் காண்போம்; இடத்தை எழுதுவோம்.**











## செயற்பாடு 4

**உரையாடலை வாசிப்போம்; செல்லும் வழியைக் குறிப்போம்.**

### உரையாடல் 1

ஜனனி :- அக்கா, நூலகத்துக்குப் போகும் வழியைச் சொல்ல முடியுமா?

யாழினி :- முன்னால் செல்லுங்க. இடது பக்கம் திரும்புங்க. நூலகம் இருக்கு.

ஜனனி :- நன்றி அக்கா.



### உரையாடல் 2

சிவா :- அண்ணா, சிவன் கோயில் எங்கே இருக்கு?

அண்ணா :- நேரே போங்க. வலது பக்கம் திரும்புங்க. சிவன்கோயில் இருக்கு.

சிவா :- சரி அண்ணா.



### உரையாடல் 3

அசங்க :- தம்பி இலங்கை வங்கி எங்கேயுள்ளது?

தம்பி :- நேராகப் போங்க. சந்தி வரும். அதையும் தாண்டி நேராகச் செல்லுங்க. வங்கியைக் காணலாம்.

அசங்க :- நன்றி தம்பி.



**உரையாடல் 4**

கீதா :- அம்மா, பிரதேச செயலகத்திற்கு எப்படி போறது?

பத்மாவதி :- முன்னால் செல்லுங்க. சந்தி இருக்கு. வலது பக்கம் திரும்பி நேராகச் செல்லுங்க.

கீதா :- நன்றி அம்மா.




**உரையாடல் 5**

சலீம் :- விவேகானந்தா பாடசாலைக்குப் போறது எப்படி?

ஐயா :- நேராகப் போங்க. நாற்சந்தி வரும். முன்னால் செல்லுங்க. இன்னுமொரு சந்தி வரும். இடது பக்கம் திரும்புங்க.

ஐயா :- நன்றி.



## சொல் அறிமுகம்

**வழி** - පාර

**முன்னால்** - ඉදිරියෙන්

**இடது** - වම

**வலது** - දකුණ

**சந்தி** - හන්දිය

**தாண்டி** - පසුකර

**காணலாம்** - දැකිය හැකි ය

**இன்மொரு** - තවත් එකක්

## செயற்பாடு 5

21


**ஆசிரியர் உதவியுடன் செவிமடுப்போம்; இவர்கள் செல்லும் இடங்களைக் கண்டுபிடிப்போம்; இணைப்போம்.**

| *யார்?* | *எங்கே?* |
|---|---|
| 1. ஜனனி | வங்கி |
| 2. சிவா | பாடசாலை |
| 3. கீதா | கோவில் |
| 4. சலீம் | பிரதேச செயலகம் |
| 5. அசங்க | நூலகம் |


## செயற்பாடு 6

**படத்தைப் பார்ப்போம்; குறியீடு செல்லும் வழியைக் கண்டு பிடிப்போம்; எழுதுவோம்.**


நேராக (முன்னால்), இடது பக்கம், வலது பக்கம்,
இரண்டாவது சந்தியில் இடது பக்கம்




______________________________



______________________________



______________________________




______________________________

## செயற்பாடு 7

22

**ஆசிரியர் உதவியுடன் உரையாடலைச் செவிமடுப்போம்; சரியான இடத்துக்குச் செல்லும் வழியைக் கண்டுபிடிப்போம்; அடையாளம் இடுவோம்.**




▲ அண்ணா பிரதேச செயலகத்துக்கு எப்படி போவது?

■ வீட்டில் இருந்து இடது பக்கம் திரும்புங்க.நேரே போங்க. இரண்டாவது சந்தி இருக்கு. வலது பக்கம் திரும்புங்கள். முன்னால் போங்க. இன்னுமொரு சந்தி வரும். நேரே போங்க வலது பக்கம் பிரதேச செயலகம் இருக்கு.


▲ நன்றி அண்ணா.

## செயற்பாடு 8

சோடியாக இணைந்து ஒருவர் கூறும் வழியைச் செய்து காட்டுவோம்.

## செயற்பாடு 9

**படங்களைப் பார்ப்போம்; கலந்தரையாடுவோம்; இடைவெளிகளை நிரப்புவோம்.**




1. கணினி அறை : <u>மூன்றாம் மாடி</u> <u>மூன்றாவது மாடி</u>
2. நூலகம் : ________________ ________________
3. தரம் - 10 : ________________ ________________
4. மலசலக் கூடம் (ஆண்) : ____________ ________________
5. முதலுதவி அறை : ____________ ________________
6. கேட்போர் கூடம் : ____________ ________________

## செயற்பாடு 10

**உதாரணத்தை அவதானிப்போம்; இடைவெளிகளை நிரப்புவோம்.**

1. ஒன்று - முதலாம் / முதலாவது

2. இரண்டு - இரண்டாம் / இரண்டாவது

3. மூன்று - ________________ / ________________

4. நான்கு - ________________ / ________________

5. ஐந்து - ________________ / ________________

6. ஆறு - ________________ / ________________

7. ஏழு - ________________ / ________________

8. எட்டு - ________________ / ________________

9. ஒன்பது - ________________ / ________________

10. பத்து - ________________ / ________________

*மூவர் கொண்ட குழுக்களாகப் பிரிவோம்; 1-10 வரை இலக்கங்களை மேலே உள்ளவாறு பயிற்சி பெறுவோம்.*

## செயற்பாடு 11

**சோடிகளாக இணைவோம்; பாடசாலை வரைபடத்தைப் பார்ப்போம்; வினாக்களைக் கேட்போம்; விடையளிப்போம்.**

▲ *நூலகம் எங்கே இருக்கிறது?*

● *நூலகம் கீழ்த்தளத்தில் இருக்கிறது.*

▲ *அதிபர் காரியாலயம் எங்கே உள்ளது?*

**இவ்வாறு ஐந்து வினாக்களை வினாவுவோம் விடையளிப்போம்.**

## செயற்பாடு 12

உங்கள் பாடசாலையில் உள்ள வெவ்வேறு இடங்களுக்கு செல்லும் வழிகளை நண்பர்களுடன் வினவுங்கள்.

## செயற்பாடு 13

**படங்களைப் பார்ப்போம்; அவதானிப்போம். விளங்கி வாசிப்போம்.**



மேலே ஏறுங்கள்.




கீழே இறங்குங்கள்.



வெளியே வாருங்கள்.



உள்ளே போங்கள்.



## செயற்பாடு 14

**பின்வரும் சொற்களை இணைப்போம்.**

| | |
|---|---|
| 1. மேலே ஏறுங்கள். | ඇතුළට යන්න. |
| 2. கீழே இறங்குங்கள். | උඩට නගින්න. |
| 3. உள்ளே போங்கள். | එළියට එන්න. |
| 4. வெளியே வாருங்கள். | පහළට බහින්න. |



## செயற்பாடு 15

**கீழே தரப்பட்டுள்ள சொற்களை அவதானிப்போம். அவற்றை மரியாதைக் கட்டளைகளாக மாற்றி எழுதுவோம்.**

1. எடு — எடுங்கள்
   போ — ____________
   எழுது — ____________
   விளையாடு — ____________

2. வை — வையுங்கள்
   வாசி — ____________
   படி — ____________
   குடி — ____________
   கதை — ____________

3. நட — நடவுங்கள்
   திற — ____________
   மற — ____________

4. தா — தாருங்கள்
   வா — ____________

5. கேள்   கேளுங்கள்

உணர்   ____________

6. நில்   நில்லுங்கள்

சொல்   ____________

## செயற்பாடு 16

**உதாரணத்தை அவதானிப்போம்; எழுத்து மொழியைப் பேச்சு மொழிக்கு மாற்றி எழுதுவோம்.**

1. வெளியே வாருங்கள்.   <u>வெளியே வாங்க</u>
2. உள்ளே போங்கள்.   உள்ளே ________
3. மேலே ஏறுங்கள்.   மேலே ________
4. தமிழ் படியுங்கள்.   தமிழ் ________
5. கதை எழுதுங்கள்.   கதை ________
6. சோறு சாப்பிடுங்கள்.   சோறு ________
7. ஜன்னலைத் திறவுங்கள்.   ஜன்னலை ________
8. புத்தகம் எடுங்கள்.   புத்தகம் ________
9. பத்திரிகை வாசியுங்கள்.   பத்திரிகை ________
10. தமிழ் பேசுங்கள்.   தமிழ் ________



## செயற்பாடு 17

**கீழே தரப்பட்டுள்ள சொற்களை அவதானிப்போம்; அவற்றை மரியாதைக் கட்டளைகளாக மாற்றி எழுதுவோம்.**

எடு — எடுங்கள் எடுங்க

1. வை - ________ / ________
2. தா - ________ / ________
3. வா - ________ / ________
4. போ - ________ / ________
5. குடி - ________ / ________
6. சாப்பிடு - ________ / ________
7. எழுது - ________ / ________
8. வாசி - ________ / ________
9. படி - ________ / ________
10. பேசு - ________ / ________
11. விளையாடு - ________ / ________
12. நட - ________ / ________

# செவிமடுப்போம் உச்சரிப்போம்





23

| ற் - ඉට් | ற - ර |
|---|---|
| தபாற் காரியாலயம் | போறது |
| நாற்சந்தி | சமையலறை |
| பற்கள் | ஏறுங்கள் |
| | இறங்குங்கள் |
| | நன்றி |
| | மூன்று |
| | மூன்றாம் |



## දැන් මට පුළුවන්

| | ✓ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍ය |
| 1. නගරයක පොදු ස්ථාන හඳුනා ගැනීම | | | |
| 2. මාර්ග විමසීම හා පිළිතුරු දීම | | | |
| 3. පාසලක ඇති තැන් හඳුනා ගැනීම හා හඳුන්වා දීම. | | | |
| 4. முதலாம், இரண்டாம் ආදි පද සුදුසු අවස්ථාවල දී භාවිත කිරීම | | | |



8

# விழாக்கள்





## செயற்பாடு 1

**படங்களைப் பார்ப்போம்; கலந்தரையாடுவோம்; விழாக்களின் பெயர்களை வாசிப்போம்; பொருத்தமான மாதத்தைத் தெரிவு செய்வோம்; எழுதுவோம்.**



நத்தார்



தைப்பொங்கல்



றமழான்



வெசாக்



தீபாவளி



பொசன்



சுதந்திர தினம்



சித்திரைப் புத்தாண்டு




## செயற்பாடு 2

**சோடிகளாகச் சேர்வோம்; வினாக்களை வினவுவோம்; விடை அளிப்போம்.**

உதாரணம் :- ▲ வெசாக் எந்த மாதத்தில் வரும்?

● வெசாக் மே மாதத்தில் வரும்.

1. நத்தார் எந்த மாதத்தில் வரும்?
2. சித்திரைப் புதுவருடம் எந்த மாதத்தில் வரும்?
3. றமழான் எந்த மாதத்தில் வரும்?
4. தைப்பொங்கல் எந்த மாதத்தில் வரும்?

## செயற்பாடு 3

**பண்டிகைகளைச் சமய அடிப்படையில் வகைப்படுத்துவோம்.**

| பௌத்தம் | இந்து | கிறிஸ்தவம் | இஸ்லாம் |
|---|---|---|---|
| | | | |



## செயற்பாடு 4

**செயற்பாடுகளைக் கலந்துரையாடுவோம்; விழாக்களை இனங்காண்போம்; தரப்பட்டுள்ள விழாக்களின் கீழ் செயல்களை எழுதுவோம்.**

**வெசாக் கூடு செய்வோம், பொங்கல் செய்வோம், தீபங்கள் ஏற்றுவோம், மருத்து நீர் வைப்போம், நத்தார் மரத்தை அலங்கரிப்போம், ஏடு தொடக்குவோம், யாத்திரை செய்வோம்.**



________________



________________



________________



________________



________________



________________



________________

1. வெசாக் ______________________

2. தீபாவளி ______________________

3. சித்திரைப் புத்தாண்டு ______________________

4. ஹஜ் ______________________

5. ரம்ழான் பண்டிகை நோன்பு இருப்போம்.

6. நத்தார்ப் பண்டிகை ______________________

7.தைப்பொங்கல் ______________________



## செயற்பாடு 5

**நாட்காட்டியை அவதானிப்போம்; ஜனனி பிறந்த மாதத்தைக் கண்டு பிடிப்போம்.**

- ஜனனி பிறந்த மாதம் எது?

▲ ____________ மாதம் பதினைந்தாம் திகதி.

- உங்களுடைய பிறந்த தினம் எப்போது?

▲ ____________ மாதம் ____________ திகதி.

## செயற்பாடு 6

24

**ஆசிரியர் திகதிகளைக் கூற எழுதுவோம்.**

*உதாரணம்* 02.05

1. ____________________ 2. ____________________
3. ____________________ 4. ____________________
5. ____________________ 6. ____________________

## செயற்பாடு 7

**திகதியை வாசித்து எழுதுவோம்.**

*உதாரணம்*

1. 03.10 - *மார்ச் மாதம் பத்தாம் திகதி*
2. 04.05 - ____________________________
3. 07.03 - ____________________________
4. 06.28 - ____________________________
5. 02.14 - ____________________________

## செயற்பாடு 8

**நண்பர்களுடன் கலந்துரையாடுவோம்; அட்டவணையில் அவர்களின் பெயரையும், பிறந்த திகதியையும் எழுதிக் கொள்வோம்.**

| | *பெயர்* | *பிறந்த திகதி* |
|---|---|---|
| | *உ+ம் : சிவா* | *மே மாதம் 10 ஆம் திகதி* |
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

## செயற்பாடு 9

### நத்தார்ப் பண்டிகை



எனது நண்பனின் பெயர் டானியல். டானியல் கிறிஸ்தவர். இயேசுநாதர் பிறந்த நாள் நத்தார்ப் பண்டிகை தினமாகும். ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் இருபத்தைந்தாம் திகதி நத்தார்ப் பண்டிகை கொண்டாடப்படும்.

கடந்த வருடம் நத்தார்ப் பண்டிகைக்கு முதல் நாள் டானியல் வீட்டிற்குச் சென்றேன். இருவரும் வீட்டை அழகாக அலங்கரித்தோம். டானியலின் அப்பா கிறிஸ்மஸ் மரத்தை வைத்தார். அதில் வண்ண வண்ண மின்குமிழ்கள், வாழ்த்து அட்டைகளால் நானும் டானியலும் அலங்கரித்தோம்.

டானியலின் அண்ணா சிறிய மாட்டுத் தொழுவத்தை அமைத்தார். நாங்கள் அதனுள் பாலன் இயேசுவை வைத்தோம். நானும் டானியலும் அவனது அண்ணா, அம்மா, அப்பா எல்லோரும் புதிய ஆடைகளை அணிந்தோம்.

எல்லோரும் அன்று இரவு பன்னிரெண்டு மணிக்கு தேவாலயம் சென்றோம். பூசையில் பங்குபற்றினோம். தேவாலயத்திலிருந்து வீடு திரும்பியதும், டானியலின் குடும்பத்தினருடன் சேர்ந்து, சிற்றுண்டிகள், இனிப்புக்கள் சாப்பிட்டு, நத்தார்ப் பண்டிகையைச் சந்தோசமாகக் கொண்டாடி மகிழ்ந்தோம்.

## சொல் அறிமுகம்

**நத்தார்** - නත්තල්

**கிறிஸ்தவம்** - ක්‍රිස්තියානි

**மாதம்** - මාසය

**பிறந்த நாள்** - උපන් දිනය

**இருபத்தைந்தாம்** - විසිපස්වන

**அலங்காரம்** - සැරසිලි

**சிற்றுண்டி** - අතුරුපස

**பண்டிகை** - උත්සවය

**மாட்டுத் தொழுவம்** - ගවගාල

**புதிய ஆடை** - අලුත් ඇඳුම

## செயற்பாடு 10

**சரி (✓) பிழை (✗) இடுவோம்.**

1. நத்தார் நவம்பர் 25 இல் கொண்டாடப்படுகிறது. ☐
2. டானியல் இந்து சமயத்தவர். ☐
3. டானியலின் அப்பா கிறிஸ்மஸ் மரத்தை வைத்தார். ☐
4. டானியலின் தம்பி மாட்டு தொழுவத்தை அமைத்தார். ☐

## செயற்பாடு 11

**படத்தைப் பார்ப்போம்; கலந்துரையாடுவோம்; இடைவெளிகளை நிரப்புவோம்.**

***(பரிசுப் பொருட்கள், நத்தார் மரம், நத்தார்த் தாத்தா, பாலகன் இயேசு)***



______________



______________



______________



______________



## செயற்பாடு 12

**பின்வரும் சொற்களை அவதானிப்போம்; வாசிப்போம்; இடைவெளிகளை நிரப்புவோம்.**

விழா - விழாவா?

வரலாம் - வரலாமா?

முடியும் - ____________

மட்டும் - ____________



## செயற்பாடு 13

**பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முழுமைப்படுத்துவோம்.**

போவீர்களா? வைப்பீர்களா? செய்வீர்களா? கொண்டாடுவீர்களா?

1. நீங்கள் மாட்டுத் தொழுவத்தை <u>அமைப்பீர்களா?</u>

2. நத்தார்ப் பண்டிகை ____________

3. நத்தார் மரத்தை ____________

4. நீங்கள் சிற்றுண்டி ____________

5. தேவாலயம் ____________





## செயற்பாடு 14

**பின்வரும் வினைச் சொற்களை வைத்து வினா வாக்கியங்களை உருவாக்குவோம்.**

1. ஒரு மாணவனுக்குப் பந்தை வீசுங்கள்.
2. வினா ஒன்றை வினவுங்கள்.
3. ஆம்/ இல்லை எனப் பதில் கூறுங்கள்.

உதாரணம்.

■ நீங்கள் தமிழ் படிக்கிறீர்களா?

▲ ஆம்/ இல்லை.

1. பாடுகிறீர்களா?
2. போ ________________
3. எழுது ________________
4. படிக்கிறீர்களா?
5. குளி ________________
6. ஆடுகிறீர்களா?
7. வரு ________________
8. சாப்பிடு ________________
9. குடி ________________
10. தூங்கு ________________



## செயற்பாடு 15

**குழுவாக இணைவோம்; விரும்பிய விழா ஒன்றைப் பற்றிக் குழுவுடன் கலந்துரையாடுவோம்; ஏனையோருக்கும் விளக்குவோம்.**

- விழாவின் பெயர்.
- விழா எப்போது நடைபெறும்?
- யாரோடு கொண்டாடுவீர்கள்?
- விழாவில் செய்யும் செயற்பாடுகள்.
- விசேட அம்சங்கள் (உணவு, விளையாட்டு, கலை நிகழ்ச்சி)
- வளர்க்கப்படும் நற்பண்புகள்.





# செவிமடுப்போம் உச்சரிப்போம்



25

ப

බ | ප

| | |
|---|---|
| பந்து | கும்பம் |
| புத்தாண்டு | தம்பி |
| பண்டிகை | சம்பல் |
| பூசை | |
| தைப்பொங்கல் | |



## දැන් මට පුළුවන්

| | ✓ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍ය |
| 1. මාස කීම | | | |
| 2. මගේ උපන් දිනය කීම හා මිතුරන්ගෙන් උපන් දිනය ඇසීම | | | |
| 3. නත්තල් උත්සවය ගැන විස්තර කීම | | | |
| 4. ප්‍රශ්න ඇසීම | | | |
| 5. ப අක්ෂරයේ ප, බ යන උච්චාරණ වෙනස්කම් හඳුනා ගැනීම | | | |




# சின்னவனாய் நான் இருந்து

## செயற்பாடு 1

26

**இவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை ஆசிரியிரின் உதவியுடன் செவிமடுப்போம்; வாசிப்போம்; படங்களுக்குப் பொருத்தமான தொழிலைத் தெரிவு செய்து இலக்கம் இடுவோம்.**

1 நான் பாரதி வித்தியாலயத்தில் வேலை செய்கிறேன். பாலருக்குக் கல்வி புகட்டுவேன். நான் ஒரு தமிழ் ஆசிரியர். எல்லோரும் தமிழ் படிக்க வருவார்கள்.

2 நான் பெரியாஸ்பத்திரியில் வேலை செய்கிறேன். நான் ஒரு தாதி. நோயாளிகளை நன்றாகக் கவனிப்பேன்.

3 நான் ஒரு தபாற்காரன். சைக்கிள் என் வாகனம். தபால் தந்தி தந்திடுவேன்.

4 வயலில் வேலை செய்வேன். நன்றாக வயலை உழுதிடுவேன். விவசாயி நான் ஆவேன்.

5 எனக்கு ஒரு கடை இருக்கிறது. நான் ஒரு வியாபாரி. சீனி, மா, அரிசி போன்றவற்றை விற்பேன்.

6 நான் வைத்தியசாலையில் வேலை செய்கிறேன். நோயாளிகளுக்கு மருந்து கொடுப்பேன். நான் ஒரு வைத்தியர்.

7 நான் நீதிமன்றத்தில் வாதிடுவேன். வழக்குகள் பேசுவேன். நான் ஒரு சட்டத்தரணி.

8 நான் பொலிஸ் நிலையத்தில் வேலை செய்கின்றேன். மக்களைப் பாதுகாப்பேன். நான் ஒரு பொலிஸ் அதிகாரி.

9 நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்கின்றேன். கணக்குகளைப் பரிசோதிப்பேன். நான் ஒரு கணக்காளர்.


10 நான் தனியார் பஸ்ஸில் வேலை செய்கிறேன். நான் பயணிகளுக்குச் சேவை செய்வேன். நான் ஒரு சாரதி.





## செயற்பாடு 2

**குழுவாகச் சேர்வோம்; குழுவில் உள்ள நண்பர்கள் எதிர்காலத்தில் செய்ய விரும்பும் தொழில்களை கண்டறிவோம்; அவற்றைப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுவோம்.**





## செயற்பாடு 3

**கீழே தரப்பட்டுள்ள தொழில்களைப் பொருத்தமான இடைவெளிகளில் நிரப்புவோம்.**

தபாற்காரர், தச்சன், விமானி, ஆசிரியர், வைத்தியர்
சட்டத்தரணி, பொலிஸ் அதிகாரி, வியாபாரி, விவசாயி, சாரதி

1. ____________ நல்ல பொருட்கள் விற்கிறார்.



2. ____________ விவசாயம் செய்கிறார்.



3. ____________ கடிதம் விநியோகிக்கிறார்.



4. ____________ நாடி பிடித்துப் பார்க்கிறார்.



5. ____________ மரவேலை செய்கிறார்.





6. ____________ அறிவுரை கூறுகிறார்.



7. ____________ வாகனம் ஓட்டுகிறார்.



8. ____________ விமானம் செலுத்துகிறார்.



9. ____________ நீதிமன்றத்தில் வாதிடுகிறார்.



10. ____________ பாதுகாப்பு வழங்குகிறார்.



## செயற்பாடு 4

குழுவாக இணைவோம்; குழுவில் இருந்து ஒருவர் தொழில்களைச் செய்து காட்ட மற்றவர் அனுமானித்துக் கூறுவோம்.

## செயற்பாடு 5

27

**ஆசிரியரின் உதவியுடன் செவிமடுப்போம்; வாசிப்போம்; பாடுவோம்.**



சின்னவனாய் நீ இருந்து
பெரியவனாய் ஆனபின்னே
என்னவாக நீ இருப்பாய்?



என்னவாக நான் இருப்பேன்?
சின்னவனாய் நான் இருந்து
பெரியவனாய் ஆனபின்னே ...



ஆசானாக நான் இருந்தால்
அறிவுரைகள் கூறிடுவேன்
சின்னஞ் சிறிய பாலருக்கு
நல்ல கல்வி நான் தருவேன்.



வைத்தியராய் நான் இருந்தால்
நாடி பிடித்துப் பார்த்திடுவேன்
நல்ல மருந்து நான் தருவேன்
நன்றாய் ஊசி போட்டிடுவேன்.

தந்தை போல நானானால்
தபாற்காரன் ஆகிடுவேன்
சைக்கிள் தன்னில் சென்றிடுவேன்
தபால் தந்தி கொடுத்திடுவேன்.





வியாபாரி நானானால்
நல்ல பொருட்கள் விற்றிடுவேன்
காய்கறிகள் விற்றிடுவேன்
நல்லவனாய் நடந்திடுவேன்.

## செயற்பாடு 6

**செவிமடுத்த பாடலை வாசிப்போம். வினைச் சொற்களை இனங்காண்போம். எழுதுவோம்.**

1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________
5. ____________________

## சொல் அறிமுகம்

| | |
|---|---|
| சின்னவனாய் | - කුඩා කල |
| பெரியவனாய் | - ලොකු කල |
| இருப்பாய் | - ඉඳී |
| என்னவாக | - කවුරුන් ලෙස |
| ஆசானாக | - ගුරුවරයෙකු ලෙස |
| அறிவுரைகள் | - උපදෙස් |
| கூறிடுவேன் | - පවසමි |
| சின்னஞ்சிறிய | - පුංචි ම පුංචි |
| பாலருக்கு | - දරුවන්ට |
| கல்வி | - අධ්‍යාපනය |
| தருவேன் | - දෙන්නෙමි |
| நாடி பிடித்து | - නාඩි අල්ලා |
| மருந்து | - බෙහෙත් |
| ஊசி | - එන්නත් කටුව |
| தந்தை | - පියා |
| தபாற்காரன் | - තැපැල්කරු |
| ஆகிடுவேன் | - වෙන්නෙමි |
| சென்றிடுவேன் | - යන්නෙමි |
| தந்தி | - විදුලි පණිවුඩය |
| கொடுத்திடுவேன் | - දෙන්නෙමි |
| பொருட்கள் | - භාණ්ඩ |
| விற்றிடுவேன் | - විකුණන්නෙමි |



## செயற்பாடு 7

**இடைவெளிகளை நிரப்பி முழுமைபடுத்துவோம், வாசிப்போம்.**




நான்

- இரு____________
- தரு____________
- கூறிடு____________
- பார்த்திடு____________
- ஊசி போட்டிடு____________
- ஆகிடு____________
- சென்றிடு____________
- கொடுத்திடு____________
- விற்றிடு____________
- நடந்திடு____________

## செயற்பாடு 8

**படங்களை அவதானிப்போம்; வாசிப்போம்.**











நீங்கள் என்ன
ஆகிடுவீர்கள்?


நாங்கள் வைத்தியர்கள்
ஆகிடுவோம்.


சிவா வைத்தியர் ஆகிடுவான்.
கீதா வைத்தியர் ஆகிடுவாள்.
அவர்கள் வைத்தியர் ஆகிடுவார்கள்.

## செயற்பாடு 9

**படங்களை அவதானிப்போம்; இடைவெளி நிரப்பி வசனங்களை முழுமைப்படுத்துவோம்.**

1. நான் வைத்தியர் ஆகிடுவேன்.
2. நாங்கள் ____________ ____________________
3. நீ ____________ ____________________
4. நீங்கள் ____________ ____________________
5. அவள் ____________ ____________________
6. அவன் ____________ ____________________
7. அவள் ____________ ____________________
8. அவர்கள் ____________ ____________________



## செயற்பாடு 10

**இடைவெளிகளை நிரப்பி முழுமைப்படுத்துவோம்.**

உ + ம் : 1. நான் தருவேன்.

நாங்கள் தரு ____________________

நீ தரு ____________________

நீங்கள் தரு ____________________

அவர் தரு ____________________

அவன் தரு ____________________

அவள் தரு ____________________

அவர்கள் தரு ____________________

நான் ____________________

நாங்கள் ____________________

நீ ____________________

நீங்கள் ____________________

அவர் சாப்பிடுவார்

அவன் ____________________

அவள் ____________________

அவர்கள் ____________________

நான் ______________________

நாங்கள் ______________________

நீ ___________எழுதுவாய்___________

நீங்கள் ______________________

அவர் ______________________

அவன் ______________________

அவள் ______________________



## செயற்பாடு 11

**நண்பர்களுடன் கலந்துரையாடுவோம்; இடைவெளிகளை நிரப்புவோம்.**

1. நான் சாரதி ______________________
2. நீ வைத்தியர் ______________________
3. ______________________ கணக்காளர்கள் ஆவீர்கள்.
4. அவர் பொலிஸ் அதிகாரி ______________________
5. அவன் தாதி ______________________
6. ______________________ ஆசிரியர்கள் ஆவோம்.

## செயற்பாடு 12

**தாயக்கட்டை விளையாடுவோம்.**



- சோடிகளாக இணையுங்கள்.
- ஒருவர் தாயக் கட்டையை உருட்டுங்கள்.
- உருட்டியபின் விழும் இலக்கத்திற்கு ஏற்ற சொல்லை பின்வரும் அட்டவணை A இல் இருந்து தெரிவு செய்யுங்கள்.

உதாரணம் - இல *4* எனில் (நீங்கள்)

| அட்டவணை A | அட்டவணை B |
| --- | --- |
| 1. நான்<br>2. நாங்கள்<br>3. நீ<br>4. நீங்கள்<br>5. அவர்<br>6. அவர்கள் | எழுது, சாப்பிடு, ஓடு, ஆடு, விளையாடு, பேசு, தேடு, செய், கழுவு, வணங்கு, மூடு, பாடு, தூங்கு |

- உங்கள் சோடியிடம் அட்டவணை B யில் இருந்து, ஒரு சொல்லைச் சொல்லும்படி கூறுங்கள்.

- அட்டவணை A யில் கிடைத்த இலக்கத்திற்கு ஏற்ப B யில் இருந்து, சோடி கூறிய வினையைக் கொண்டு சரியாக வசனம் அமையுங்கள்.

உதாரணம் : -
- தாயக்கட்டையில் கிடைத்த இலக்கம் 4. அதற்கான சொல் நீங்கள்.
- சோடி கூறிய வினை சாப்பிடு.

- எனவே பின்வருமாறு வாக்கியத்தைக் கூற வேண்டும்.
- நீங்கள் சாப்பிடுவீர்கள்.
- இவ்வாறு சோடிகள் மாறி மாறி விளையாட்டில் ஈடுபடுங்கள்.



## செயற்பாடு 13

**கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

நீங்கள், இரவில் எத்தனை மணிக்குச் சாப்பிடுவீர்கள்?
நான் இரவில் ஏழு மணிக்குச் சாப்பிடுவேன்.

1. நீங்கள் எத்தனை மணிக்கு நித்திரை செய்வீர்கள்? ____________

2. நாளை எத்தனை மணிக்கு எழும்புவீர்கள்? ____________

3. எத்தனை மணிக்கு முகம் கழுவுவீர்கள்? ____________


4. எத்தனை மணிக்குப் பாடசாலைக்குப் போவீர்கள்? ____________

சோடிகளாக இணைவோம். இது போன்று நண்பர்களுடன் வினா எழும்பிப் பேசிப் பழகுவோம்.





# செவிமடுப்போம் உச்சரிப்போம்



**ம் - මි**

28

| | |
|---|---|
| மருந்து | மூடுங்கள் |
| மாணவன் | முயல் |
| விமானம் | முடியும் |
| மரம் | உண்மை |
| கடிதம் | ஆமை |
| விமானி | |



## දැන් මට පුළුවන්

| | ✓ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍ය |
| 1. රැකියා හඳුන්වන වචන කීම | | | |
| 2. රැකියාවන්ට අදාළ ක්‍රියාකාරකම් හඳුනා ගැනීම | | | |
| 3. මා කැමති රැකියාව ගැන කීම | | | |
| 4. මා අනාගතයේ දී කිරීමට බලාපොරොත්තු වන රැකියාව ගැන කීම | | | |
| 5. මිතුරෙකුගේ අනාගත රැකියාව විමසීම | | | |




# 10 சுத்தம் சுகம் தரும்

படம் பார்த்துக் கலந்துரையாடுவோம்.



## செயற்பாடு 1

**படத்தை அவதானிப்போம்; சொற்களை உரத்து வாசிப்போம். சரியான இலக்கத்தை இடுவோம்.**

| | | |
|---|---|---|
| ☐ தண்ணீர்ப் போத்தல் | ☐ பாடப் புத்தகம் | ☐ பூச்சாடி |
| ☐ பென்சில் பெட்டி | ☐ குப்பைக் கூடை | ☐ அழிப்பான் |
| ☐ அப்பியாசக் கொப்பி | ☐ நாட்காட்டி | ☐ புத்தகப்பை |
| ☐ உலகப்படம் | ☐ கரும்பலகை | ☐ தும்புத்தடி |

## செயற்பாடு 2

**பின்வரும் சிங்கள அறிவுறுத்தல்களை வாசிப்போம்; பொருத்தமான தமிழ்ச் சொற்களைத் தெரிவு செய்து எழுதுவோம்.**

உதாரணம் - පන්තිය සිසිල් කිරීම — மின்விசிறி

1. මේසය උඩ අලංකාරයට තැබීම ____________
2. ගුරුතුමා මෙහි හුණු කූරෙන් ලිවීම ____________
3. කුණු දැමීමට භාවිත කිරීම ____________
4. පාඩම් ඉගෙනීමට භාවිත කිරීම ____________
5. පැන්සල් තබා ගැනීම ____________
6. වතුර ගෙන යාම ____________
7. කළුලෑල්ල මැකීම ____________
8. දිනය බලා ගැනීම ____________
9. පොත් ගෙන යාම ____________
10. රට රටවල් ගැන තොරතුරු සොයා ගැනීම ____________
11. පන්තියේ දෙන වැඩ ලිවීම ____________
12. පන්තිය පිරිසිදු කිරීම ____________

## செயற்பாடு 3

29

ஆசிரியரின் உதவியுடன் வகுப்பறையில் உள்ள பொருட்களின் பெயர்களை மீண்டும் செவிமடுப்போம்; உரத்து வாசிப்போம்.

## செயற்பாடு 4

30

ஆசிரியரின் உதவியுடன் செவிமடுப்போம்; வகுப்பறையில் உள்ள பொருட்களைக் காட்சிப்படுத்துவோம்.

## செயற்பாடு 5

**படத்துக்கான சொற்களைக் கண்டு பிடிப்போம்; எழுதுவோம்.**



| | | | | |
|---|---|---|---|---|
| பூ | ~~பா~~ | ~~தி~~ | சா | ~~ந~~ |
| ~~கா~~ | ச் | ~~றி~~ | டி | ~~ட~~ |

பூச்சாடி



| | | | | | |
|---|---|---|---|---|---|
| த | க | ரு | ச | ப | கை |
| ந | மா | ம் | லா | ல | வ |

__________



| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூ | பெ | சி | பெ | ட் | பூ |
| ன் | ச் | ல் | டி | ட | டா |

__________



| | | | | | |
|---|---|---|---|---|---|
| த | ண் | வ | ர் | த் | ல் |
| கா | ணீ | பி | போ | ப் | ம் |

______________



| | | | | |
|---|---|---|---|---|
| எ | ழி | ஈ | ப் | ர் |
| அ | இ | ற | ப | ஒ |

______________



| | | | | |
|---|---|---|---|---|
| த | வி | கா | ன | ப |
| நா | ட் | டா | ட் | டி |

______________



| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூ | அ | சி | சா | பா | பூ |
| ழி | ச் | ப் | டி | ட | ன் |

______________



| | | | | | |
|---|---|---|---|---|---|
| இ | உ | ல | ப் | ஆ | கி |
| ஒ | க | ப | ஐ | ட | ம் |

______________



| | | | | | |
|---|---|---|---|---|---|
| ன | சு | ன் | சா | ந | பூ |
| கா | றி | மி | டி | வி | சி |

______________



| | | | | | |
|---|---|---|---|---|---|
| கு | பை | சி | ப் | கூ | பூ |
| கா | க் | பி | டி | டை | ட |

______________



| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | து | டி | பு | த | டி |
| ம் | ம | சி | த் | ர | வ |

______________



| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | பு | த | ப் | ச | பை |
| த் | பி | க | ம | டி | வ |

______________

## செயற்பாடு 6

**வகுப்பறையை நன்கு அவதானிப்போம். விடை எழுதுவோம்.**

வகுப்பறையில் வலது பக்கத்தில் உள்ள இரண்டு பொருட்களைக் கூறுங்கள்.

உ+ம் : நாட்காட்டியும் உலகப்படமும்

1. வகுப்பறையில் இடது பக்கம் உள்ள இரண்டு பொருட்களைக் கூறுங்கள்.
   1........................ 2........................

2. வகுப்பறைக்கு முன்னால் உள்ள இரண்டு பொருட்களைக் கூறுங்கள்.
   1........................ 2.........................

## செயற்பாடு 7

**நீங்கள் தினமும் பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன் வகுப்பறையில் செய்யும் செயற்பாடுகளைக் கலந்துரையாடுங்கள்.**



## செயற்பாடு 8

**படங்களைஅவதானிப்போம்;செயல்களைக்கண்டுபிடிப்போம்; செயல்களை இணைப்போம்.**

| | |
|---|---|
| 1. சாரா | கூட்டுகிறார். |
| 2. முஹம்மது | நீர் ஊற்றுகிறார். |
| 3. ஜனனி | மேசையை ஒழுங்குபடுத்துகிறார். |
| 4. அசங்க | சுவரைச் சுத்தம் செய்கிறார். |
| 5. சிவா | குப்பையை வீசுகிறார். |
| 6. கீதா | கரும்பலகையைத் துடைக்கிறார். |

## செயற்பாடு 9

**குழுவாக இணைவோம்; கடமைகளைப் பகிர்ந்தளிப்போம்.**

| பெயர் | செயற்பாடு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

## செயற்பாடு 10

- பகிர்ந்தளித்த கடமைகளைக் குழுவாக நடித்துக் காட்டுவோம். மற்றைய குழுக்கள் நடித்துக் காட்டியதைக் கண்டுபிடித்துக் கூறுவோம். இவ்வாறு மாறி மாறிச் செய்வோம்.

- சோடிகளாக இணைவோம்; ஒருவர் சொல்லும் செயலை மற்றவர் செய்து காட்டுவோம்.

## செயற்பாடு 11

**இப்போது சிவாவின் நண்பன் விஷ்ணுவின் கடிதத்தை வாசிப்போம்.**

பாடசாலை விடுதி,
இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்,
05/05/2015

அன்புள்ள அப்பா,
நான் நல்ல சுகம். எனது நண்பர்களும் நல்ல சுகம். உங்கள் சுகம் எப்படி ?

எனக்கு அடுத்த மாதம் பரீட்சை வருகிறது. அதனால் நண்பர்களுடன் சேர்ந்து படிக்கிறேன். தமிழ்ச் சங்கத்தில் இணைய உள்ளேன். அங்கு சென்று பல புத்தகங்கள் வாசிக்கலாம்.

பாடசாலை விடுமுறைக்கு உங்களைப் பார்க்க வருவேன். வரும்போது சிவாவும், அசங்கவும் என்னோடு வருவார்கள்.

வணக்கம்.

இப்படிக்கு,
உங்கள் அன்பு மகன்,
விஷ்ணு.

## செயற்பாடு 12

**கடிதத்தை வாசிப்போம்; வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. கடிதத்தை எழுதுபவர் யார்? ____________________
2. கடிதத்தை யாருக்கு எழுதுகிறார்? ____________________
3. கடிதத்தை எங்கிருந்து எழுதுகிறார்? ____________________
4. விஷ்ணுவோடு வீட்டுக்கு வருபவர்கள் யாவர்?

____________________


## செயற்பாடு 13

**பின்வரும் அட்டைகளை வாசிப்போம்; கீழே உள்ள இடைவெளிகளை நிரப்புவோம்.**



















1

இல-*10*

2

3

4

5

## செயற்பாடு 14

**விஷ்ணுவின் விபரத்தை வாசிப்போம்; விண்ணப்பப்படிவத்தை நிரப்புவோம்.**

விஷ்ணு ஒரு மாணவன். அவனுடைய பாடசாலை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. அவன் ஏழாம் தரத்தில் படிக்கிறான். அவனது வகுப்பாசிரியர் திருமதி புவனேஸ்வரி. அவன் 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இருபதாம் திகதி பிறந்தான். அவனுடைய அப்பாவின் பெயர் முகுந்தன். அம்மாவின் பெயர் கமலா. இவர்கள் இலக்கம் 10, பிரதான வீதி, பண்டாரவளையில் இருக்கிறார்கள். இவர்களை 0791382245 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்பு கொள்ளலாம்.

### சொல் அறிமுகம்

**அடுத்த** - ඊළඟ/ලබන

**பரீட்சை** - විභාගය

**அதனால்** - ඒ නිසා

**விடுமுறை** - නිවාඩු

**என்னோடு** - මා සමග

**அவனுடைய** - ඔහුගේ

**தொலைபேசி** - දුරකථනය

**கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்வோம்.**

**தமிழ்மொழிச்சங்க உறுப்பினர் விண்ணப்பப் படிவம்**

1. பெயர் : ____________________

2. முழுப்பெயர் : ____________________

3. முகவரி : ____________________

4. பாடசாலை : ____________________

5. தரம் : __________

6. வயது : [ ] பிறந்த திகதி: [ ] மாதம்: [ ] வருடம்: [ ]
(பொருத்தமான கூட்டுக்குள் x அடையாளம் இடுக.)

7. பால் : ஆண் [ ] பெண் [ ]

8. பெற்றோரின் தொலைபேசி இல : ____________________


____________________ ____________________

திகதி விண்ணப்பதாரியின் ஒப்பம்

வகுப்பாசிரியரின் பெயர் : ____________________

____________________ ____________________

திகதி ஒப்பம்



## செயற்பாடு 15

**கீழே உள்ள படங்களை அவதானிப்போம்; கலந்துரையாடுவோம்; அறிவுறுத்தளை வாசிப்போம்.**



வரிசையாக நில்லுங்கள்.



அமைதியாக இருங்கள்.



பாதை மூடப்பட்டுள்ளது.



பாதணிகளைக் கழற்றவும்.



கைகளைக் கழுவுங்கள்.



குப்பைகளை உரிய
இடத்தில் போடுங்கள்.



கொதித்தாறிய நீரைக் குடியுங்கள்.



போசாக்கான உணவுகளை
உண்ணுங்கள்.



நீரை வீணாக்காதீர்கள்.




விளம்பரங்களை
ஒட்டாதீர்கள்.

## செயற்பாடு 16

- ஒருவர் அறிவுறுத்தலை வழங்க அனைவரும் செய்து காட்டுவோம்.
- ஒருவர் அறிவுறுத்தலை செய்து காட்ட அனைவரும் அறிவுறுத்தலை கூறுவோம்.



## செவிமடுப்போம் உச்சரிப்போம்



ர் - ර්

31

| | |
|---|---|
| கரும்பலகை | மரம் |
| பெயர் | முகவரி |
| பிரதான | தரம் |
| கல்லூரி | தண்ணீர் |
| இவர்கள் | |
| சுவர் | |



## දැන් මට පුළුවන්

| | ✓ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍ය |
| 1. පන්ති කාමරයේ ඇති උපකරණ ගැන කීම | | | |
| 2. පන්ති කාමරයේ ඇති උපකරණ ගැන ලිවීම | | | |
| 3. පන්ති කාමරයේ උදෑසන ක්‍රියාකාරකම් කීම | | | |
| 4. සරල ලියුමක් ලිවීම | | | |
| 5. මගේ පෞද්ගලික තොරතුරු ලිවීම | | | |
| 6. පාසලේ පුවරුවල ලියා ඇති උපදෙස් කියවා තේරුම් ගැනීම | | | |



# 11 மழை




## செயற்பாடு 1

**படங்களை அவதானிப்போம்; கலந்துரையாடுவோம்; வாசிப்போம்.**



மழை



சூடு



மின்னல்



பனி மூட்டம்



வெயில்



புயல்



குளிர்

## செயற்பாடு 2

**நண்பர் கூறுவதைச் செவிமடுப்போம்; நடித்துக் காட்டுவோம்.**

01. மின்னல்
02. வெயில்
03. பனி மூட்டம்
04. புயல்
05. மழை
06. சூடு
07. குளிர்

## செயற்பாடு 3

**பொருத்தமான வானிலையைக் கலந்தரையாடுவோம்; எழுதுவோம்.**

1. தொலைக்காட்சியை (Tv) நிறுத்துங்கள். - ______________
2. கோப்பி குடியுங்கள். - ______________
3. குடையை எடுங்கள். - ______________
4. ஐஸ்கிரீம் குடியுங்கள். - ______________
5. A.Cயைப் போடுங்கள். - ______________
6. ஜன்னலைச் சாத்துங்கள். - ______________
7. டோர்ச்லைட் பிடியுங்கள். - ______________

## செயற்பாடு 4

**உதாரணத்தை அவதானிப்போம்; சோடிகளாக இணைந்து உரையாடுவோம்.**


கொழும்பு


புத்தளம்


யாழ்ப்பாணம்


மட்டக்களப்பு


மாத்தறை


நுவரெலியா

உதாரணம் :

1. ■ யாழ்ப்பாணத்தில் மழையா?
   ▲ இல்லை. சரியான வெயில்.

2. ■ யாழ்ப்பாணத்தில் வெயிலா?
   ▲ ஆம். கடுமையான வெயில்.

- நுவரெலியாவில்
- மட்டக்களப்பில்
- கொழும்பில்
- மாத்தறையில்
- புத்தளத்தில்

## செயற்பாடு 5

32

### பாடலைச் செவிமடுப்போம்; பாடுவோம்.

# மழை

1 குடை பிடித்துச் செருப்புமிட்டு
புத்தகமும் கொண்டு
குடு குடென நடந்து வரும்
குழந்தைகளே கேளீர்.

2 மழைக்காலம் வழி வழுக்கும்
மிகக் கவனம் மக்காள்
வழியருகே வெள்ளம் உண்டு
விலகி வர வேண்டும்.

3 வெள்ளத்தில் கல்லெறிந்து
விளையாட வேண்டாம்
வீண் சண்டையால் வழுக்கி
விழுந்தெழும்ப வேண்டாம்.

4 கண்மணிகாள் நீர்ச் சிரங்கு
காலில் வரும் கவனம்
கண்ணுறக்கம் இல்லாமல்
கதறி அழ நேரும்.



## செயற்பாடு 6

**பாடலைச் செவிமடுப்போம்; கலந்துரையாடுவோம்; படங்களுக்குப் பொருத்தமான இலக்கத்தை இடுவோம்.**









## செயற்பாடு 7

*பாடலை இசையுடனும் அபிநயத்தோடும் பாடுவோம்; மாணவர் மன்றத்தில் முன்வைப்போம்.*

## செயற்பாடு 8

**பின்வரும் படங்களை அவதானிப்போம்; குழுவாகக் கலந்துரையாடுவோம்; வாசிப்போம்.**



**01.கோழி ஒன்று இருந்தது, அது அடைகாத்தது.**



**02.குஞ்சுகள் நான்கு பொரித்தன. அவை தாயோடு வளர்ந்தன.**



03. ‘‘தனியாகச் செல்ல வேண்டாம்...’’ எனத் தாய் சொன்னது.
ஒரு குஞ்சு தாய் சொல்லைக் கேட்கவில்லை.



04. தாயை விட்டுத் தூரச் சென்றது. அந்தக் குஞ்சைப்
பருந்து கண்டது. பருந்து குஞ்சைப் பிடிக்க வந்தது.



05. தாய்க் கோழி பருந்தைத் துரத்தியது. குஞ்சு தாயிடம் ஓடி வந்தது.




06. ''அம்மா! அம்மா! இனி நான் உங்கள் சொல்லைத் தட்ட மாட்டேன்.'' என்று கூறியது.

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| **கோழி** | - | කිකිළි |
| **அடைகாத்தது** | - | බිත්තර රකිනවා |
| **கோழிக் குஞ்சு** | - | කුකුළු පැටියා |
| **அவை** | - | ඒවා |
| **தாய்** | - | මව |
| **பருந்து** | - | උකුස්සා |
| **பாதுகாப்பு** | - | ආරක්ෂාව |
| **ஓடி வந்தது** | - | දුවගෙන ආවා |
| **பிடிக்க** | - | අල්ලන්න |
| **வளர்ந்தன** | - | වැඩුණා |
| **மட்டும்** | - | පමණක් |
| **காப்பாற்றியது** | - | බේරාගත්තා |
| **தூரம்** | - | දුර |
| **கேட்கவில்லை** | - | ඇහුවේ නෑ |
| **நான்கு** | - | හතර |

## செயற்பாடு 9

**படம் பார்த்துப் பேசுவோம்.**



**பின்வரும் வாக்கியங்களை வாசிப்போம்; படங்களுக்குப் பொருத்தமான எழுத்தை மேலுள்ள பெட்டிக்குள் எழுதுவோம்.**

அ ஒரு குஞ்சு தாயைவிட்டு தூரச் சென்றது. அந்தக் குஞ்சைப் பருந்து கண்டது.

ஆ தாய்க் கோழி பருந்தைத் துரத்தியது.

இ குஞ்சுகள் நான்கு பொரித்தன.

ஈ குஞ்சு தாயிடம் ஓடி வந்தது. ‘‘இனி நான் உங்கள் சொல்லைத் தட்டமாட்டேன்’’ என்றது.

உ குஞ்சுகளைத் ‘‘தனியாக செல்ல வேண்டாம்’’ என்று தாய்க் கோழி சொன்னது.

ஊ கோழி ஒன்று இருந்தது. அது அடைகாத்தது.

## செயற்பாடு 10

**பின்வரும் படங்களை அவதானிப்போம்; வாக்கியங்களை வாசிப்போம்; வினைச் சொற்கள் முடியும் இடத்தை அவதானிப்போம்.**



குஞ்சு நிற்கிறது.




குஞ்சுகள் நிற்கின்றன.



பருந்து பறக்கின்றது.



பருந்துகள் பறக்கின்றன.



கோழி துரத்துகின்றது.



கோழிகள் துரத்துகின்றன.



மயில் ஆடுகின்றது.



மயில்கள் ஆடுகின்றன.

## செயற்பாடு 11

**பின்வரும் படங்களை அவதானிப்போம்; பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புவோம்.**

நாய், பறவை, குரங்குகள்,
நாய்கள், குரங்கு, பறவைகள்,
மயில், மயில்கள்.

பறக்கின்றது, ஓடுகின்றன,
ஆடுகின்றது, பறக்கின்றன,
ஆடுகின்றன, ஓடுகின்றது,
பாய்கின்றது, பாய்கின்றன.




______________________



______________________



______________________



______________________



______________________



______________________








**வசனங்கள் அமைப்போம்.**





## செயற்பாடு 13

**மாணவர்களைச் சோடிகளாக்குங்கள்.**

(A) அட்டவணையை ஒருவருக்கும்,

(B) அட்டவணையை ஒருவருக்கும் வழங்குங்கள்.

ஒருவர் வாசிக்க மற்றவர் இடைவெளியை நிரப்புங்கள்.

(A)

1. நாய் குரைத்தது.
2. குதிரை __________________.
3. மயில்கள் ஆடின.
4. குரங்கு __________________.
5. பூனை பால் குடித்தது.
6. சிங்கங்கள் __________________

(B)

1. நாய் __________________
2. குதிரை ஓடியது.
3. மயில்கள் __________________
4. குரங்கு பாய்ந்தது.
5. பூனை பால் __________________
6. சிங்கங்கள் தின்றன.



## செயற்பாடு 14

**கட்டங்களில் இருந்து சொற்களைத் தெரிவு செய்வோம்; வாசிப்போம்; வாக்கியங்கள் அமைப்போம்.**

| | | | |
|---|---|---|---|
| | | | ஓடின |
| | பூனை | | பறந்தன |
| | மான்கள் | | பறந்தது |
| | நாய் | | சிறியது |
| | புலி | | குடித்தது |
| | சிங்கம் | | குடித்தன |
| பெரிய | கரடிகள் | பால் | தின்றது |
| வெள்ளை | யானை | புல் | தின்றன |
| சிறிய | பாம்பு | இறைச்சி | ஓடியது |
| பச்சை | கிளி | நீர் | பாய்ந்தது |
| | பசு | | கடித்தது |
| | புறாக்கள் | | கத்தியது |
| | | | பாய்ந்தன |
| | | | குரைத்தது |

உதாரணம் :-

1. பெரிய பூனை பால் குடித்தது.
2. பச்சைக் கிளி பறந்தது.
3. ______________________
4. ______________________
5. ______________________
6. ______________________
7. ______________________
8. ______________________
9. ______________________
10. ______________________



# செவிமடுப்போம்
# உச்சரிப்போம்



33

| ண் - ණ් | ன் - න් |
|---|---|
| கண்டது | மான்கள் |
| வேண்டாம் | நான்கு |
| வீணை | ஒன்று |
| இரண்டு | பூனை |
| யாழ்ப்பாணம் | தின்றன |
| | நன்மை |
| | கன்று |
| | நன்றி |



## දැන් මට පුළුවන්

| | ✓ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍ය |
| 1. කාලගුණය පිළිබඳ ව කීම | | | |
| 2. කාලගුණය ගැන ලිවීම | | | |
| 3. කතාවක් කියවා තේරුම් ගැනීම | | | |
| 4. குடித்தது, குடித்தன යන පදවල වෙනස හඳුනාගෙන භාවිත කිරීම | | | |

# 12

# பரிசு வாங்குவோம்








## செயற்பாடு 1

**படத்தை அவதானிப்போம்; விடையளிப்போம்.**

1. இந்தப்படத்தில் யார் யார் இருக்கிறார்கள்?
2. படத்தில் என்ன என்ன பொருட்களைக் காணலாம்?
3. இந்த இடம் எது?



## செயற்பாடு 2

34

**ஆசிரியர் உதவியுடன் உரையாடலைச் செவிமடுப்போம்; வாசிப்போம்.**

முதலாளி :- வாங்க … வாங்க
என்ன வேணும்?

முகுந்தன் :- பரிசுப் பொருள் ஒன்று வாங்க வேணும்.

முதலாளி :- என்ன மாதிரியான பரிசு?

முகுந்தன் :- மகனுக்கு விளையாட்டுப் பொருட்கள் என்றால் நல்ல விருப்பம்.

வியாபாரி :- ஓ… இதைப் பாருங்க.

முகுந்தன் :- இந்தப் பந்து என்ன விலை?

முதலாளி :- இது எண்பது ரூபாய்.

முகுந்தன் :- விலையைக் கொஞ்சம் குறைக்க முடியுமா?

முதலாளி :- இது நல்ல பந்து, குறைக்க முடியாது.

முகுந்தன் :- சரி. பரவாயில்லை தாங்க.

முதலாளி :- இந்தாங்க.

**சரி/ பிழை இடுவோம்.**

1. அப்பா பழங்களை வாங்குகிறார். ☐
2. அப்பா மகளுக்கு பரிசுப் பொருள் வாங்குகிறார். ☐
3. பந்தின் விலை எண்பது ரூபாய். ☐
4. அப்பா பந்து வாங்குகிறார். ☐



## செயற்பாடு 3




**சோடிகளாக இணைவோம்; பொருட்களை அடையாளம் காணுவோம்; உரையாடுவோம்; விலையைக் கேட்டறிவோம்.**

▲ அந்தப் பேனை என்ன விலை ?

● அது பத்து ரூபா.

## செயற்பாடு 4

**விஷ்ணுவின் பந்து பேசுகிறது; கலந்துரையாடுவோம்; வாசிப்போம்.**

### பந்து பேசுகிறது

நான் விஷ்ணுவின் பந்து. என் கதையைக் சொல்கிறேன் கேளுங்கள். நான்சீனநாட்டில்இருந்துஇலங்கைக்குக்கொண்டு வரப்பட்டேன். என்னை ஒரு கடையில் வைத்திருந்தார்கள். என்னோடு சில நண்பர்களும் இருந்தார்கள்.

நான் அழகாக இருந்தேன். ஒரு நாள் விஷ்ணுவின் அப்பா கடைக்கு வந்தார். என்னைக் கண்டார். கடையிலிருந்து வாங்கினார்.

விஷ்ணுவுக்குப் பிறந்தநாள் பரிசாகக் கொடுத்தார். விஷ்ணு என்னை நண்பர்களோடு வீசி விளையாடினான். நான் மகிழ்ச்சி அடைந்தேன். இப்போது நானோ பழையவன். விஷ்ணு என்னைக் கவனிப்பதே இல்லை. என்னோடு விளையாடுவதில்லை. நான் இப்போது தனிமையில் இருக்கிறேன்.

## சொல் அறிமுகம்

| | |
|---|---|
| **பரிசு** | - ත්‍යාග |
| **விளையாட்டுப் பொருட்கள்** | - ක්‍රීඩා උපකරණ |
| **விருப்பம்** | - කැමතියි |
| **விலைகூட** | - මිල අධිකයි |
| **குறைக்க** | - අඩු කරන්න |
| **தொழிற்சாலை** | - කර්මාන්ත ශාලාව |
| **பிறந்த நாள்** | - උපන් දිනය |
| **மகிழ்ச்சி** | - සතුට |
| **தனிமையில்** | - තනි ව |

## செயற்பாடு 5

**கலந்துரையாடுவோம்; சோடிகளாக இணைவோம்; படங்களுக்குப் பொருத்தமான வசனங்களைப் 'பந்து பேசுகின்றது' என்ற உரைப்பகுதியில் இருந்து கண்டுபிடிப்போம்; எழுதுவோம்;**



______________________________



______________________________



______________________________



______________________________



______________________________

## செயற்பாடு 6

**'பந்து பேசுகின்றது' என்ற உரைப்பகுதியை அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வசனங்களை முழுமைப்படுத்துவோம்.**






1. நான் சீன நாட்டில் ____________________ இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டேன்.





2. என்னை ____________________ இருந்து வீட்டுக்குக் கொண்டு வந்தார்.



3. என்னை ______________________ வைத்திருந்தார்.



4. ______________________ சில நண்பர்கள் இருந்தார்கள்.



5. விஷ்ணு என்னை ______________________ வீசி விளையாடினான்.

## செயற்பாடு 7

**இருவராக இணைந்து வினாக்களை வினாவியும் விடை வழங்கியும் பேசிப் பழகுவோம்.**






நான் —
- கோயிலில்
- வீட்டில்
- பாடசாலையில்
- வகுப்பில்
- மைதானத்தில்
- வைத்தியசாலையில்

— இருக்கிறேன்.


















நான் —
- கோயிலில்
- வீட்டில்
- பாடசாலையில்
- வகுப்பில்
- மைதானத்தில்
- வைத்தியசாலையில்



— இருந்து வருகிறேன்.




நான் அம்மாவோடு கோயிலுக்குப் போகிறேன்.

நான் —
- நண்பியோடு ______________________
- மாமாவோடு ______________________
- தங்கையோடு ______________________
- மாமியோடு ______________________
- அப்பாவோடு ______________________

## செயற்பாடு 8









**இவற்றுள் உங்களுக்கு விருப்பமான ஒன்றைத் தெரிவு செய்யுங்கள். நீங்கள் உங்களை அந்தப் பொருளாகக் கற்பனை செய்யுங்கள். ஐந்து வசனம் எழுதுங்கள்.**

1. நான் யார்?

2. எங்கே இருந்தீர்கள்?

3. எங்கே இருக்கிறீர்கள்?

4. இப்போது என்ன செய்கிறீர்கள்?



## செயற்பாடு 9

**தமிழில் மொழிபெயர்ப்போம்.**


1. මම පාසලේ සිට එමි.
2. මම කෝවිලේ සිට ආවෙමි.
3. මම කඩේ සිටියෙමි.
4. මම යහළුවන් සමග සෙල්ලම් කළෙමි.
5. මම අම්මාත් සමග කඩේ ගියෙමි.

# செவிமடுப்போம்
# உச்சரிப்போம்



35

**ஞ் - ඤ්**



கொஞ்சம்

மஞ்சள்

இஞ்சி

பஞ்சு

சஞ்சிகை

குஞ்சு

ஞானம்

ஞாபகம்

ஞாயிறு



## දැන් මට පුළුවන්

| | ✓ ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍ය |
| 1. භාණ්ඩයක මිල ඇසීම හා මිල කීම | | | |
| 2. තමන් ගැන කීම හා ලිවීම | | | |